JESUS REDEEMS MINISTRIES

# வாலிபர் உலகம்

மலர் 14 | இதழ் 06 | ஆகஸ்ட் 2023 | ஆண்டு சந்தா ₹ 100

# விழித்திருங்கள்!

அழிந்து போகின்ற ஆத்துமாக்களுக்காகவும்,
தேசத்தை அழிவிலிருந்து மீட்டெடுக்கவும்
நீங்கள் விழித்திருந்து ஜெபியுங்கள்!!



# உள்ளே...





இளம் நெஞ்சங்களின் மனதில் வேதத்தின் விளக்கேற்றி, சிந்திக்க வழிகாட்டி, சீஷனாய் மாற்றி, அவர்களை உலகத்திற்கு வெளிச்சமாய் மாற்றுவதே இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் உன்னத நோக்கமாகும். விசுவாச இளைஞர்கள் அவனியெங்கும் உருவாக, அவர்களுக்கென்றே மாதந்தோறும் வெளிவரும் பூங்கொத்து இது!

இப்பத்திரிக்கையைக் குறித்த தான உங்களது கருத்துக்கள், உங்களுக்கு பிரயோஜனமாயிருந்த கட்டுரைகள் மற்றும் நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை, உங்கள் பெயர் மற்றும் ஊருடன், 9750955547 என்ற எண்ணிற்கு SMS அல்லது Whatsapp மூலமாகவோ தெரியப்படுத்துங்கள்.

**30,000 வாலிபர்கள்**
கையில் தவழும்
வாலிபர் உலகம் பத்திரிகை
உங்கள் கையில் உள்ளதா?

அனைத்து இயேசு விடுவிக்கிறார் கிளை அலுவலகங்களிலும் சந்தா செலுத்தி நீங்கள் வாலிபர் உலகம் சந்தாதாரராகலாம். Youth.jesusredeems.com என்ற website மூலமாக ஆன்லைனில் சந்தா செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
**மேலும் தொடர்புக்கு 9750955547**

ஆசிரியர்: மோகன் சி. லாசரஸ்
இணை ஆசிரியர்: அவினாஷ்
ஆசிரியர் குழு: வயலா | ஜெயசீலன் | ரவி | வில்லியம் | ரேச்சல் | கிளாடிஸ் | சுமா | கெத்சி கிளார்வின் | சதீஷ் | காலேப் | பெனிட்டா | ஜெயா | ஜாய்லின் ஜாண்
வடிவமைப்பு: டேவிட்சன்

இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்,
நாலுமாவடி, தூத்துக்குடி - 628 211.
Phone: 04639-353333 | Cell:9750955547
E-mail: youth@jesusredeems.org
www.jesusredeems.com | youth.jesusredeems.com



# தலைவாசல்

# விழித்திரு!

அன்பான இளம் நெஞ்சங்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள்!

இந்திய தேசத்தை உலுக்கிய மிகப் பெரிய சம்பவம் தான் நவம்பர் 26, 2008ல் நடந்த **Mumbai Attack.** இந்த தாக்குதலை 28/11 என்றும் கூறுவர். பாகிஸ்தானிலிருந்து புறப்பட்ட 10 தீவிரவாதிகள், மும்பையில் 12 இடங்களில் துப்பாக்கி சூடு மற்றும் வெடிகுண்டு தாக்குதல்கள் செய்து 17 நாடுகளைச் சேர்ந்த 175 உயிர்களை பலி வாங்கி, 8 நாடுகளைச் சேர்ந்த 300 பேர்களை படுகாயப்படுத்தினர். மூன்று நாளைக்கு பிறகு **NSG Force** மற்றும் காவல் துறையினரின் தீவிர முயற்சியால் அனைத்து பிரச்சனைகளையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். இதில் 15 காவலர்களும் 2 **NSG Commandos**ம் மரணம் அடைந்தனர்.

மும்பை பட்டணம் இவ்வளவு பெரிய விபத்து அல்லது தாக்குதலுக்கு உள்ளானதற்கு சிலருடைய விழிப்பில்லாமையே காரணம் என்று பல தகவல்கள் கூறுகின்றன. 10 தீவிரவாதிகள் மும்பையின் ஒரு பகுதியில் வந்து தரை இறங்கிய போது; அங்கே உள்ள மீன்பிடிக்கும் மக்கள் அவர்களை யார் என்று கேட்டிருக்கிறார்கள். உடனே அவர்கள் காவல் துறையினரிடம் தகவல் கொடுத்தும் அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மேலும் இதே தீவிரவாதிகள் **Taj Hotel**ல் தங்கி நோட்டம் எடுத்துள்ளனர். நடு இரவில் ஒவ்வொரு தளமாக சென்று நடந்து பார்த்து பயிற்சி எடுத்தார்கள் என்று கூறப்படுகிறது. மேலும் இவர்களுக்கு உதவி செய்ய 2 பேர் **Sim Card** வாங்கி கொடுத்துள்ளனர் என்றும் சொல்லப்படுகிறது. இப்படி நம் நாட்டிற்குள் யார் வருகின்றார்கள் என்று விழிப்புடன் இருந்து கவனிக்காமல் இருப்பதால் தான், இன்னும் நம்முடைய நாட்டில் தீவிரவாத செயல்கள் அவ்வப்போது நடந்து கொண்டிருக்கிறது. விழித்திருக்க வேண்டிய வீரன், விழிப்பை மறந்தால் இதனைப் போன்ற பெரிய விபரீதங்கள் நேரிட வாய்ப்புகள் உண்டு.

**எனக்கன்பான வாலிபனே! தேவன், நீ விழித்திருக்கும் ஒரு வீரனாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறார். ஒரு பக்கம் அவர் வருகைக்கு நீ ஆயத்தமாய் விழித்திருக்க வேண்டும். மறு பக்கம் அவர் வருகைக்கு அநேகர் ஆயத்தப்பட விழித்திருக்க வேண்டும்.**

**நீ தூங்கினால் எதிரி 'களை' என்ற ஆபத்தையும், 'பாவம்' என்ற அவலட்சணத்தையும், 'இச்சை' என்ற ஆட்கொல்லியையும் விதைத்துக் கொண்டே தான் இருப்பான்.**



உன் கண் விழிப்பின் ஜெபமும்,
கண்ணீரின் ஜெபமும்,

உன் தேசத்தை சத்துருவின்
கண்ணியிலிருந்து காக்கும்.

உன் இருதயத்தின் பாரமும்,
சுவிசேஷம் சொல்லும் பாதமும்,

உன் தேசத்தை எழுப்புதலுக்கு
நேராக கொண்டு செல்லும்.

யௌவன சந்ததியே
விழித்திரு, விழித்தெழு
உன் தேசம் உன் கையில்;
உன் தேசத்தை ஜெபத்தாலும்,
சுவிசேஷத்தாலும் நிரப்பு...

கிறிஸ்துவின் பணியில்
**அவினாஷ்**

# Bike Stunting

சாட்சி தொகுப்பு: பெனிட்டா




**இளம் வயதிலேயே பைக் மேல் மோகம் கொண்டு, அதில் சாதிக்க வேண்டும் என்று Bike Ride பயிற்சி பெற்று அதற்காகவே தன்னை அர்ப்பணித்த சகோதரரை, தேவன் அதிலிருந்து விடுவித்து, இன்றைக்கு எவ்வளவு ஆசீர்வாதமாக வைத்திருக்கிறார் என்பதை அவரிடமே கேட்போமா?**

**உங்களது குடும்பம் மற்றும் சிறு பிராயம் பற்றி சொல்லுங்களேன்?**

என் பெயர் ஜான் வெஸ்லி. நான் வேலூர் மாவட்டத்தில் திரு. தேவா நந்தன் – திருமதி மாலதி தம்பதியருக்கு மகனாகப் பிறந்தேன். எனது அப்பா CRPFஇல் பணி புரிந்து வருகிறார்கள். எனது தாயார் வீட்டிலிருந்து Sunday school எடுப்பார்கள். எனக்கு ஒரு அக்கா. அவர்களுக்கு திருமணம் ஆகிவிட்டது. நான் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து வளர்ந்தேன். ஆகையால் சிறுவயதில் இருந்து ஆலயத்துக்கு போவதிலும், Sunday Schoolக்கு அனுப்புவதிலும் என் பெற்றோர் என்னை கவனமாக நடத்தினார்கள். நானும் எனது சிறு வயதிலிருந்தே ஒழுங்காக ஆலயத்திற்கு சென்று, வேதத்தை வாசித்து, தவறாமல் ஜெபம் செய்து வந்தேன்.

**சரி, உங்களுடைய பள்ளிப் படிப்பு மற்றும் வாலிப வயதில் உங்கள் வாழ்க்கை எப்படி இருந்தது?**

பள்ளிப் படிப்பை நன்றாக படித்துக்கொண்டிருந்தேன். 2017 ஆம் ஆண்டு 12ம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கும்போது எனக்கு Freestyle Motorcycle Stuntriding என்ற மோட்டார் Sports கேள்விப்பட்டு அதைப்பற்றி youtubeல் பார்த்து தெரிந்து கொண்டேன். 12ம் வகுப்பு முடித்தவுடன் அதே ஆர்வத்தோடு, எங்கள் வீட்டில் இருந்த ஒரு 100CC பைக்கை பயிற்சிக்காக பயன்படுத்தினேன். என்னுடைய அப்பா CRPFஇல் northஇல் இருந்ததால், என் அம்மாவை ஏமாற்றிக்கொண்டு அந்த பைக்கை பயிற்சிக்காக பயன்படுத்த ஆரம்பித்தேன். நான் ஏமாற்றி பைக் ஓட்டுவதை கர்த்தர் அம்மாவுக்கு வெளிப்படுத்தினார். நான் ஆர்வத்தோடு கடினமாக பயிற்சி செய்து வந்ததால், 2018 ஆம் ஆண்டின் முடிவில் என் அப்பாவிடம் சொல்லி 200CC பைக் வாங்க சொன்னேன்.





**சரி, பைக் வாங்கி மிக ஆர்வமாக கற்றுக்கொண்டீர்கள்... அதன் பிறகு படிப்பை தொடர்ந்தீர்களா அல்லது Stundridingல் கவனம் செலுத்தினீர்களா?**

பள்ளிப்படிப்பை முடித்து கல்லூரிப் படிப்பையும் முடித்தேன். நான் Freestyle motorcycle stuntridingல் அநேக நுணுக்கமான காரியங்களை கற்றுக்கொண்டு நன்றாக stunt செய்வதைப் பார்த்து இந்தியாவின் மிகப்பெரிய stunt teamல் இருந்து, துணை அணியாக (Sub Team) செல்வதற்கான அழைப்பு வந்தது.



கர்த்தருடைய கிருபையால் என்னுடைய கல்லூரிப்படிப்பையும் அப்போதுதான் முடித்திருந்தேன். எங்களுடைய அணியில் இருந்த 4 பேர் இணைந்து, 2020ஆம் ஆண்டு Teamwheelzup என்ற பெயர் உருவாக்கி நாங்கள் ஒன்றாக செயல்பட கோயம்புத்தூருக்கு அழைக்கப்பட்டிருந்தோம். அப்பொழுது லாக்டவுன் நேரமாக இருந்ததால் எங்களால் போக முடியவில்லை. இருந்தாலும் நாங்கள் இருந்த ஊரிலேயே அதிகமாக பயிற்சி செய்தோம். ஒரு நாளைக்கு சுமார் 5 மணி நேரம் பயிற்சியில் இருப்பேன் பயிற்சியில் எடுக்கப்படும் அனைத்து போட்டோஸ், வீடியோஸ் உடனுக்குடன் இன்ஸ்டாகிராமில் upload செய்து, ஒரு சில மாதங்களில் எங்கள் Teamwheelzup அக்கவுண்ட் 15 ஆயிரம் followersஐ பெற்றது.

**பைக் பயிற்சி முடித்து ஒரு Team உருவாக்கினீர்கள்... அதன்பிறகு உங்கள் குழுவின் வளர்ச்சி எப்படி இருந்தது?**

ஒருநாள் எங்கள் Team Leader KTM Factory Riderஆக வேண்டுமானால் புதிய KTM Bike வாங்க வேண்டுமென்று சொன்னார். அந்த பைக்கின் விலை 2.30 லட்சத்துக்கும் அதிகமாக இருந்தது. இவ்வளவு விலைக் கொடுத்து வாங்கமுடியாத சூழ்நிலையிலும், அப்பாவிடம் என் வாழ்க்கைக்கு மிக முக்கியமானது என்று சொன்னதால், என் அப்பா மிக மன வேதனையோடு EMIல் வாங்கிக் கொடுத்தார்.

**KTMபைக் வாங்கிய பின்பு நீங்கள் பெற நினைத்த இலக்கை அடைந்தீர்களா?**

2020ம் ஆண்டு டிசம்பர் மாதம் கோவைக்கு சென்று விட்டேன். அம்மாவும் அப்பாவுடன் டெல்லிக்கு சென்றார்கள். நான் கோயம்புத்தூருக்குச் சென்ற பின்பு எங்களுடைய Team வளர ஆரம்பித்தது. எங்களுடன் அநேக மாணவர்கள் இணைய ஆரம்பித்தனர். அவர்களுக்கு பயிற்சிக் கொடுத்து நிறைய சம்பாதிக்க ஆரம்பித்தேன். எவ்வளவு சம்பாதித்தாலும் கர்த்தருக்கு நான் முதலிடம் கொடுப்பதில் தவறவில்லை. எல்லாமே நன்றாக சென்று கொண்டிருந்தது. 2021ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 2ஆம் தேதி காலை 6 மணிக்கு நான் Stuntriding பயிற்சியில் இருக்கும்போது எதிர்பாராமல் தவறி



விழுந்து என் இடது கையில் Radial Bone எலும்பு முறிவு மற்றும் முழங்கை இடப்பெயர்வு (Elbow dislocation) ஆகிவிட்டது. மருத்துவர் அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்று சொல்லி வேலூர் மருத்துவமனையில் எனக்கு அறுவை சிகிச்சை நடந்தது. அதன் பின்பு அம்மா அப்பா மிக வேதனையோடு எனக்கு குணமாகும் வரை டெல்லியில் இருக்கும்படி அழைத்து சென்றார்கள். எப்பொழுது திரும்பி வருவீர்கள் என்று Team leader என்னை கேட்டபோது என்ன சொல்வதென்று தெரியாமல் மிகவும் மனம் சோர்ந்த நிலையில் இருந்தேன்.



**சரி, நீங்கள் கர்த்தரை தேடுவதில் எந்த குறையும் வைக்கவில்லை... கர்த்தரை கேட்டு தானே வந்திருப்பீர்கள். அப்படியானால் ஏன் இந்த நிலை வந்தது என்று யோசித்தீர்களா?**

ஆம், கோயம்புத்தூரில் எல்லாமே நன்றாகத் தான் சென்று கொண்டிருந்தது. ஏன் எனக்கு இப்படி நடந்தது என்று அம்மாவிடம் கேட்டேன். அதற்கு அம்மா, நீ போய் இதற்கான பதிலை வேதத்தில் தேடு, என்றார்கள். நானும் முழு மனதோடு வேதத்தை தேடினபொழுது கர்த்தர் என்னோடு பழைய ஏற்பாட்டில் இருந்து பேசினார். அதன்பிறகு நான் திரும்பி கோவைக்கு வருவது சந்தேகம் என்று Teamஐ நடத்துபவரிடம் சொன்னேன். நான் திரும்பி செல்லவில்லை என்று சொன்னவுடன், இன்ஸ்டாகிராம் accountல் இருந்த குரூப் போட்டோஸ் மற்றும் வீடியோசை அழித்துவிட்டு அவருடைய பெயரை மாற்றிக் கொண்டார். இதைக் கண்டதும் ‘‘நான் ஆசையாக கடினமாக உழைத்த காரியத்தை அழித்து விட்டார்களே’’ என்று என்னுடைய இருதயம் சுக்கு நூறாக உடைந்து விட்டது. எனக்கு கை உடையாமல் இருந்திருந்தால் இன்றைக்கு வரைக்கும் சுயநலமான மனிதர்களிடம் அடிமையாகத்தான் இருந்திருப்பேன்.

சில மாதங்களுக்குப் பின்பு நான் வேலூருக்கு வந்துவிட்டேன். அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல் இருந்தேன். ஜெபம் செய்து மேற்படிப்பிற்காக விண்ணப்பித்தேன். நாட்கள் செல்லச் செல்ல நான் கர்த்தரோடு அதிகமாக நெருங்க ஆரம்பித்தேன். ஆவிக்குரிய நண்பர்களோடு இணைந்து ஊழியம் செய்ய ஆரம்பித்தேன். சில மாதங்களுக்குப் பின்பு என்னுடைய உறவினர் ஒருவர் நீ திறமையுள்ளவன், நான் உனக்கு sponcer செய்கிறேன் என்று சொன்ன ஆசை வார்த்தைகளை நம்பியும், என் சுய முயற்சியினாலும் திரும்பவும் கோவைக்கு செல்ல திட்டம் தீட்டினேன். அதற்காக பல மாதங்களாக முயற்சிகள் எடுத்தும் எதுவும் வாய்க்கவில்லை. ஆகஸ்ட் 10ஆம் தேதி என்னுடைய பிறந்தநாள் அன்றைக்கு போகலாம் என்று யோசித்து கர்த்தரிடம் என்னை ஒப்புக்கொடுத்து, நான் மறுபடியும் கோவைக்கு செல்ல இருக்கிறேன், உமக்கு சித்தம் இல்லை என்றால் என்னை தடை செய்யும் என்று ஜெபித்துவிட்டு ஆண்டவருடைய பதிலுக்காக காத்திருந்தேன். ஆகஸ்ட் 4ஆம் தேதி அதிகாலையில், என்னுடைய மாணவன் ஒருவன் Bike stunt பயிற்சியில் இருக்கும் பொழுது அவன் மீது பைக் விழுந்து அவன் இடுப்பு எலும்பு உடைந்து, சரீரத்தை விட்டு சிதறி இருந்ததை, என் கையால் பொறுக்கிக் கொண்டு மருத்துவமனைக்கு எடுத்து செல்வதைப் போன்று தரிசனம் பார்த்தேன். அந்த முதல் வாரத்தில் வேலூரில் நடைபெற்ற வாலிபர் கூட்டத்தில் கலந்துகொண்ட போது, ஒரு அண்ணன் மூலமாக தேவன் நன்மையானதை தருவார் என்று கர்த்தர் என்னோடு பேசினார். பின்பு அநேக காரியத்தில் தேவன் என்னை புடமிட்டு அவருக்கு பிரியமில்லாத காரியங்களை என்னிலிருந்து எடுத்து அவருக்கு பிரியமாக மாற்றினார். எனக்கு சிஎம்சி வேலூரில் நல்ல வேலை கிடைக்கச் செய்து இன்றைக்கு என்னை ஆசீர்வாதமாக வைத்திருக்கிறார்.



**வாலிபர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

Bike stunt Riding செய்து அநேக வாலிபர்களுக்கு ஒரு தவறான முன் உதாரணமாய் இருந்த என்னை தம்முடைய கிருபையினால் விடுவித்து, இப்பொழுது அநேகருக்கு சாட்சியாக வைத்திருக்கிறார். நீங்களும் இப்படி ஆண்டவருக்கு பிரியமில்லாத காரியங்களை செய்து கொண்டிருந்தால், அதை விட்டு வெளியே வர ஆண்டவரிடம் ஒப்புக்கொடுத்து ஜெபிக்கும்போது, தேவன் உங்களையும் விடுவித்து ஆசீர்வதிப்பார்.

**அன்பான வாலிபர்களே! நீங்களும் கர்த்தருக்கு பிரியமில்லாத காரியங்களை செய்து சாதிக்க வேண்டும் என்று நினைக்கிறீர்களா? கர்த்தருக்கு பிரியமில்லாததை செய்யும்போது அது ஆசீர்வாதமாக இருக்காது. எனவே சகோதரர் ஜான் வெஸ்லியை போல ஆண்டவருக்கு உங்களை ஒப்புக்கொடுங்கள்! ஆசீர்வதிக்கப்படுவீர்கள்!**

புதிர்: வில்லியம்

# வேதாகம புதையல் வேட்டை

**வேதத்தில் ஒவ்வொரு மாதத்திற்கும் ஒவ்வொரு பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாதத்திற்கும் என்ன பெயர் மற்றும் அது வேதாகமத்தில் எந்த புஸ்தகத்தில் மற்றும் எந்த அதிகாரத்தில் உள்ளது என்பதை கண்டுபிடித்து அனுப்பவும்.**

குறிப்பு [பழைய ஏற்பாட்டில் உள்ளது]

| மாதங்கள் | மாதத்தின் பெயர் | வேத ஆதாரம் |
|---|---|---|
| முதலாம் மாதம் | | |
| இரண்டாம் மாதம் | | |
| மூன்றாம் மாதம் | | |
| நான்காம் மாதம் | நான்காம், ஐந்தாம், ஆறாம் மாதத்திற்கு வேத ஆதாரம் மட்டும் | |
| ஐந்தாம் மாதம் | | |
| ஆறாம் மாதம் | | |
| ஏழாம் மாதம் | | |
| எட்டாம் மாதம் | | |
| ஒன்பதாம் மாதம் | | |
| பத்தாம் மாதம் | | |
| பதினொன்றாம் மாதம் | | |
| பன்னிரெண்டாம் மாதம் | | |

கடந்த மாத வெற்றியாளர் - சகோதரி **எஸ்தர்,** (காளையார்கோயில்)

அவர்களை வாழ்த்துகிறோம்.

**பதில் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 15.08.2023**

BIBLE Treasure Hunt

Jesus Redeems Youth Ministries,
Nalumavadi, Thoothukudi Dist - 628 211.
Cell: 9750955547 | Tel: 04639- 353535.
eMail: youth@jesusredeems.org

## கடந்த மாத விடைகள்


1. தாவீது – ஆண்டவருடைய இருதயத்திற்கு ஏற்றவன்
2. இயேசு – இவர் என்னுடைய நேசகுமாரன்
3. யூதாஸ் – கேட்டின் மகன் அல்லது முத்தத்தினால் காட்டிக் கொடுக்கிறவன்
4. தானியேல் – ஆண்டவருக்கு மிகவும் பிரியமானவன்
5. பேதுரு – கேபா அல்லது இந்த கல்லின் மேல் என் சபையை கட்டுவேன்

ஆலோசனை: அவி



# Abuse & Affair

Heart Beat



நான் கல்லூரியில் முதலாமாண்டு படிக்கிறேன். என்னை ஒருவிதமான பயம் ஆட்கொண்டு, அடிக்கடி தூக்கத்தில் பயந்து எழும்புகிறேன். காரணம், என்னுடைய உறவினர் ஒருமுறை என்னிடம் தவறாக நடந்து கொண்டார். அதன்பிறகு அடிக்கடி அந்த நபர் என்னிடம் தவறாக நடந்துகொள்ள முயற்சித்தது என்னை மிகவும் வேதனைப்படுத்துகிறது. இதை என் பெற்றோரிடம் சொன்ன போது, அவர்கள் என்னை திட்டினார்கள்; என்னை சந்தேகப்பட்டார்கள். என் பெற்றோரே என்னை நம்பாததால் நான் மிகவும் உடைந்து போய் விட்டேன். இந்த சூழலில் என் கல்லூரியில் Senior அண்ணாவின் நட்பு கிடைத்தது. அந்த அண்ணனிடம் நடந்த எல்லாவற்றையும் சொன்னேன், அவர் என்னை புரிந்துக் கொண்டு எனக்கு ஆறுதல் கூறினார். அந்த அண்ணன் என்னிடம் காட்டிய அன்பும், ஆறுதலும் நாளடைவில் காதலாக மாறியது. இதை அறிந்த என் பெற்றோர் என் மீது கோபமாகி என்னை ஒவ்வொரு நாளும் சித்திரவதை செய்கிறார்கள். தகாத வார்த்தைகளினால் என்னை காயப்படுத்துகிறார்கள். என்னால் அந்த அன்பை விட முடியவில்லை. படிப்பை விட்டு, அவரை திருமணம் செய்து கொள்ளலாம் என்று யோசிக்கிறேன். என்னுடைய முடிவு சரியா என்று தெரியவில்லை. எனக்கு உதவி செய்வீர்களா? - சரளா, ஊட்டி.

அன்பு சகோதரி சரளா! உங்களின் கடிதம் படிப்பதற்கு வேதனையாகவும், மிகுந்த துக்கமாகவும் உள்ளது. ஒரு பக்கம் உங்களை வேதனைப்படுத்திய உறவினர், மறுபக்கம் புரிந்து கொள்ளாத பெற்றோர். இப்படி சொந்தங்களே உங்களை களங்கப்படுத்தியதையும் வார்த்தையினால் காயப்படுத்தியதையும் தெளிவாக புரிய முடிகிறது.

சரளா! பெண்களை மிகவும் மரியாதைக்குரியவர்களாய் பார்க்கும் இந்த தேசத்தில், பல நேரங்களில் பெண்களை இன்னும் ஒரு விளையாட்டு பொருளாகவும், விற்பனைப் பொருளாகவும் பார்ப்பது வேதனையான ஒன்று. இப்படிப்பட்ட சூழ்நிலையிலிருந்து யாராலும் எளிதில் வெளியே வர முடியாது. காரணம், அந்த மனஅழுத்தம் ஒரு பக்கம், என்னை நம்ப வேண்டிய பெற்றோர் என்னை நம்பவில்லையே என்ற வேதனை மற்றொரு பக்கம். இப்படி பல போராட்டங்களுக்கு மத்தியிலும் உங்களுடைய கல்லூரி படிப்பை தொடர்ந்தது மிகப் பெரிய விஷயம்.

சரளா, இப்பொழுது உள்ள சூழலில் உங்களிடம் தவறாய் நடந்தவரிடமிருந்து விலகி இருக்க வேண்டும். மேலும் நீங்கள் தனிமையாய் இருப்பதை தவிர்க்கவும். அப்படி செய்வதால் உங்கள் மனஉளைச்சல் மற்றும் மனவேதனையிலிருந்து சற்று வெளியே வர வாய்ப்புண்டு. மேலும் அந்த வேதனையான நினைவுகள் வரும் போது, உடனே அந்த எண்ணங்களை திசை திருப்ப ஒரு புத்தகம் வாசிப்பதோ அல்லது பிடித்த பாடலை கேட்பதோ போன்ற செயல்களில் ஈடுபட்டால், இதிலிருந்து விரைவில் வெளியே வர முடியும். இல்லையென்றால் அந்த எண்ணத்திலேயே மூழ்கி நீங்கள் முடங்கி விட நேரிடும்.

இந்த சிக்கலில் இருந்து வெளியே வர முற்பட்ட நீங்கள் மறுபடியும் ஒரு பிரச்சனையில் மாட்டியிருப்பது வேதனையான ஒன்று. தற்பொழுது அண்ணனாக பழகியவரை காதலிக்கிறேன் என்று சொல்வதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

சரளா, அநேக நேரம் நாம் நம்முடைய வேதனையை பிறரிடம் பகிர்ந்து கொள்ளும் போது, மனதுக்கு இதமாக இருக்கும். ஆனால் எதிர்பாலரிடம் சொல்லும் போது இது போன்ற பல பிரச்சனைகள் வரலாம். ஆரம்பத்தில் அண்ணனாக பழகிய நபர் உங்களுக்கு ஆறுதலாகவும் ஆதரவாகவும் பேசியதால் எப்படி உங்களின் வாழ்க்கைத் துணையாக மாற முடியும்?

சரளா, நீங்கள் தற்பொழுது கல்லூரி முதலாம் ஆண்டு தான் படிக்கிறீர்கள், இந்த வயது உங்கள் வாழ்க்கைத் துணையை தெரிந்தெடுக்கும் பக்குவம்

நிறைந்த வயதாக இருக்க முடியாது. மேலும் தற்பொழுது அவர் பேசிய ஆறுதலான வார்த்தையும், அன்பான ஆலோசனையும், அவர் உங்களுக்கு வாழ்க்கைத்ற துணையாக அமைய தகுதியானவர் என்று சொல்லவும் முடியாது.

உங்களுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட காயங்களும், ரணங்களும் ஆறுவதற்கு முன்னால், மறுபடியும் உங்கள் வாழ்க்கை மற்றொரு வேதனையான காரியத்திற்குள் போக வேண்டாம். சற்று சிந்தித்து செயல்படுங்கள். நாம் துக்கத்தில் இருக்கும் போது, நம்பிக்கை உடைந்த சூழலில் இருக்கும் போது யாராவது அன்பாய் பேசினால் மனதுக்கு மிகவும் மென்மையாகவும், ஆறுதலாகவும் இருக்கும். அப்படிப்பட்ட சூழ்நிலையில் அந்த ஆலோசனையை மட்டும் எடுத்துக் கொண்டு அந்த பிரச்சனையிலிருந்து வெளியே வர முயற்சி செய்ய வேண்டும். மாறாக ஆலோசனை வழங்கியவர் மீது கவனம் செலுத்துவது சரியான தீர்வு அல்ல. இதற்கு பிறகும் ‘அப்படி பேசியவர் தான் என் வாழ்க்கை துணை’ என்று முடிவு எடுப்பது சரியாக இருக்குமா என்று சற்று சிந்தியுங்கள்.

## சரளா! ஒரு வேளை இந்த காதலைத் தொடர்ந்தால் என்ன நேரிடும்?

- நீங்கள் நேசித்தவர் உங்களுக்கு கிடைக்கலாம்.
- உங்கள் பெற்றோரின் உறவில் ஒரு பிரிவு வரலாம்.
- உங்கள் திருமணத்திற்கு பிறகு ஒருவேளை நீங்கள் நேசித்த நபர் உங்கள் முந்தைய வாழ்க்கையை வைத்து பேசினால் அல்லது சந்தேகப்பட்டால், உங்கள் திருமண வாழ்க்கை எப்படி இருக்கும்?
- ஒருவேளை திருமணத்திற்கு பிறகு, நீ தவறு செய்த பெண் தானே என்று முன் நடந்த காரியத்தை பேசினால், என்ன செய்வீர்கள்.?
- காதலிக்கும் வரை காதலன், தாலி கட்டிய பிறகு கணவன். எனவே எப்பொழுதும் பாசமும், அன்பும் கிடைக்கும் என்று மனக்கோட்டை கட்டிவிட முடியாது.
- காரணம், கல்லூரி படிக்கும் அவருக்கு போதுமான பக்குவம் இல்லாததால், உங்களை வெறுத்து வேறு ஒரு உறவை நாடலாம்.

இப்படி பல சிக்கல்கள் வர வாய்ப்பு உண்டு.




## சரளா! ஒரு வேளை இந்த உறவைத் துண்டித்து, கல்லூரி படிப்பை தொடர்ந்தால் என்ன நேரிடும்?

- ஒரு பக்கம் காதலித்த நபரை மறப்பது கடினமாக இருந்தாலும், ‘வாழ்க்கையில் வெளிச்சத்தை நோக்கி போகிறேன்’ என்ற திருப்தி இருக்க வாய்ப்பு உண்டு.
- நீங்கள் ஒரு வெற்றியுள்ள பட்டதாரியாக வலம் வரலாம்.
- இளம் வயதில் பல இன்னல்களையும், துன்பங்களையும் தாண்டி, இலக்கை நோக்கி பயணித்த பெண்மணி என்று சமுதாயம் பேசலாம்.
- எந்த பெற்றோர் உங்களை சந்தேகப்பட்டார்களோ, உங்களுடைய முடிவை பார்த்து, மனம் மாறி என் மகள் தூய்மையானவள் என்று பாராட்டலாம்.
- உங்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட காயங்களும், தழும்புகளும் நாளடைவில் மறைந்து, ஒரு புதிய துவக்கத்தை துவங்கலாம்.
- உங்களைப் போன்று காயப்பட்டவர்கள், சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பார்த்து தவறான முடிவு எடுக்காமல், சிறந்த முடிவை எடுக்க நீங்கள் பலருக்கு ஆலோசனை சொல்லலாம்.

எனவே சரளா, சற்று யோசித்துப் பார்த்து சரியான முடிவு எடுங்கள். உங்களின் முடிவு பலருக்கு ஒரு முன்னுதாரணமாகவும் இருக்கலாம், அல்லது தவறான எடுத்துக்காட்டாகவும் அமையலாம். உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல எவனை விழுங்கலாம் என்று வகைத் தேடி சுற்றித்திரிவதால், தெளிந்த புத்தியுள்ளவர்களாய் விழித்திருந்து அவன் கண்ணியிலிருந்து தப்பித்துக் கொள்ளுங்கள். சரியான தீர்மானம் எடுக்க இயேசப்பா உதவி செய்வாராக!

''நான் உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன்'' (சங். 32:8)

முகப்பு செய்தி: சதீஷ்



# விழித்திருங்கள்!

2012-ல் இயேசு வரப் போகிறார், இந்த உலகம் ஒரு முடிவுக்கு வரப்போகிறது என்றும், இயேசுவின் வருகையின் நாள் அதுதான் என்றும் அறிவித்து பெரும் பரபரப்பை அமெரிக்காவில் ஏற்படுத்தினார் ஹெரல்ட் கேம்பிங்க் என்பவர். ஆனால் அவர் சொன்னபடி எதுவும் நடக்கவில்லை. இவர் மட்டுமில்லை இவரைப் போலவே அநேகர் எழும்பி இப்படிப்பட்ட செய்திகளை உலகில் பரப்பிக் கொண்டே இருக்கின்றனர். **“நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்;...”** **(மத். 24:44)** என்று நம்முடைய வேதம் தெள்ளத் தெளிவாக சொல்கிறது.



இன்று இந்த பூமியில் யுத்தங்கள், பஞ்சங்கள், கொள்ளை நோய்கள், பூமியதிர்ச்சிகள் என்று அவருடைய வருகைக்கு முன்பாக அவர் சொன்ன எல்லா அடையாளங்களும் வெகு தீவிரமாக நிறைவேறிக் கொண்டு இருப்பதை நம் கண்கள் காண பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம். சக மனிதனை மனிதனாக இன்று யாரும் நேசிப்பதில்லை, அன்பு தணிந்து கொண்டே வருகிறது, பள்ளிக் கல்லூரிக்கு நோட்டுப் புத்தகத்துடன் போய் வந்த காலங்கள் மாறி பட்டாக் கத்தியுடனும், போதை வஸ்துக்களுடனும் போய் வரும் வாலிபர்களை தான் அதிகம் இன்று பார்க்க முடிகிறது. சுபாவ அன்பு என்பது அகால பாதாளத்தில் போய் விட்டது என்றுதான் சொல்ல வேண்டும். ஒவ்வொருநாளும் புதியப் புதிய கோணத்தில் புதியப் புதிய சம்பவங்களும், மனிதனுடைய கூக்குரல்களும் நம் இரத்தத்தை உறையச் செய்து கொண்டுதான் இருக்கிறது.

இவை எல்லாவற்றையும் பார்த்து கொண்டு இருக்கும் புறஜாதி ஜனங்கள் இது மகா கலி காலம் என்று சொல்லிக் கொள்கிறார்கள். **ஆனால் கடைசி நாட்களில் மனிதர்கள் தற்பிரியராயும், பணப்பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும், தாய் தகப்பன்மாருக்குக் கீழ்படியாதவர்களாயும், நன்றியறியாதவர்களாயும்,**



**பரிசுத்தமில்லாதவர்களாயும், சுபாவ அன்பில்லாதவர்களாயும், இணங்காதவர்களாயும், அவதூறு செய்கிறவர்களாயும், இச்சையடக்க மில்லாதவர்களாயும், கொடுமையுள்ளவர்களாயும், நல்லோரைப் பகைக்கிறவர்களாயும், துரோகிகளாயும், துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப்புள்ளவர்களாயும், தேவப்பிரியராயிராமல் சுகபோகப் பிரியராயும், தேவ பக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்.** ஏனெனில் இயேசுவின் வருகைக்கு முன்பாக இப்படிப்பட்ட ஜனங்கள் இந்த பூமியில் எழும்புவார்கள் என்று வேதம் நமக்கு தெளிவாக சொல்கிறது. ஆண்டவருடைய பிள்ளைகளாக இருக்கின்ற நாம் இப்படிப்பட்டவர்களை விட்டு விலகியும் விழிப்புடனும் இருக்க வேண்டும். நோவாவின் நாட்களில் ஜனங்கள் தேவனைக் குறித்த உணர்வற்றவர்களாகவும், தன் இஷ்டப்படி பெண் கொண்டும், பெண் எடுத்தும் வாழ்ந்து வந்தார்கள். இவர்களின் மத்தியில் நோவா தேவ பயமுள்ளவனாகவும், நீதிமானாகவும் விழிப்புள்ளவர்களாவும் இருந்து, தன்னையும் தன் குடும்பத்தையும் காத்து வந்தான்.



மேலும் இன்று சமூக வலைத்தளங்களில் அதிகம் பரவிக் கொண்டு இருக்கிற ஒன்று LGBTQ. இயேசுவின் வருகைக்கு முன்பாக நடக்கும் அடையாளங்களில் இதுவும் ஒன்று, **"நோவாவின் காலத்தில் எப்படி நடந்ததோ, அப்படியே மனுஷகுமாரன் வரும் காலத்திலும் நடக்கும்" (மத். 24:37).** உலகத்தின் ஏதோ ஒரு மூலையில் வருடத்திற்கு ஒருமுறை தங்களை மற்றவர்களுக்கு காண்பித்து கொண்டு இருந்தவர்கள் இன்று வெகு பகிரங்கமாக நாம் வாழும் இந்தியாவிலும், சென்னை, கோவை போன்ற பெரு நகரங்களிலும் வெளிப்படையாக தங்களை அறிமுகப்படுத்திக் கொள்கிறார்கள். இவை எல்லாவற்றிற்கும் மேலாக நீதிமன்றம், ஒரு ஆண் ஆணையும், ஒரு பெண் பெண்ணையும் திருமணம் செய்து கொள்ளலாம், இது தனிப்பட்ட மனிதனின் சுயவிருப்பு சம்பந்தப்பட்டது என்று சொல்லும் அளவிற்கு இன்று காலம் சென்று விட்டது.

இப்படிப்பட்ட ஜனங்கள் மத்தியில் வாழும் நீங்கள் நோவாவைப் போல விழிப்பாய் இருந்து தேவ கிருபையை காத்துக் கொண்டு இயேசுவின் வருகைக்கு ஆயத்தமாய் இருங்கள். மற்றவர்களையும் ஆயத்தப்படுத்துங்கள்.

**எனக்கன்பான வாலிபர்களே! நீங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த பூமிக்கு சீக்கிரமாய் வரப்போகிறார். அவருடைய வருகைக்கு முன்பாக இந்த பூமியில் எவை எல்லாம் சம்பவிக்கும் என்று அவர் அடையாளமாக சொன்னாரோ, அவை எல்லாம் நம்மை சுற்றி தீவிரமாக நிறைவேறிக் கொண்டு இருக்கின்றன. எனவே "உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிறபடியினால் விழித்திருங்கள்" (மத். 24:42). இயேசுவின் வருகைக்கு உங்களைப் பரிசுத்தப்படுத்தி ஆயத்தம் பண்ணிக் கொள்ளுங்கள்.**



சாதனை: சுமா






# குறைகள் VS நிறைகள்

வருங்கால சாதனையாளர்களுக்கு என்னுடைய அன்பின் வாழ்த்துக்கள்! மனிதனாய் பிறந்த ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் ஏதோ ஒரு குறை இருக்கத் தான் செய்கிறது. உதாரணமாக சரீரத்திலோ, அல்லது நமது மனதிலோ, ஏதோ ஒன்றில் குறை இருக்கிறது. நம்மிடம் இருக்கும் குறைகளைப் பெரிதாக எண்ணினால் நம்மால் சாதிக்க முடியாது. இன்று சாதனையாளர்களாய் உள்ள ஒவ்வொருவரும் தங்களுக்குள் இருந்த குறைகளை எதிர்மறையாக பார்க்காமல், சாதிக்கத் தூண்டும் கோலாக பார்த்ததால் வெற்றிக் கண்டுள்ளனர். இதை வாசிக்கும் ஒவ்வொருவருடைய குறைகளை சாதனை கோலாக மாற்ற ஒரு சாதனையாளரின் வாழ்க்கை பயணம் உங்களுக்காக!

மைக்கேல் பெல்ப்ஸ் **(Michael Fred Phelps)** அமெரிக்கா தேசத்தில் பிறந்தவர். மகிழ்ச்சியான குடும்பத்தில் மிக சந்தோஷமாக வாழ்ந்து வந்தார். சிறுவயதில் சுறுசுறுப்பாக இருந்த பெல்ப்ஸ் படிப்பில் மட்டும் கவனம் செலுத்த முடியாமல் இருந்துள்ளார். இதை அறிந்த பெல்ப்ஸ்சின் தாயார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். பெல்ப்ஸை பரிசோதித்த மருத்துவர் பெல்ப்ஸ்சிடம், ஒரு குறைபாடு உள்ளதை கண்டறிந்தார். பெல்ப்ஸ் **ADHD** என்ற கவன சிதறல் நோயால் பாதிக்கப்பட்டு இருந்தார். 5 நிமிடம் கூட ஒரு விஷயத்தில் கவனம் செலுத்த முடியாமல் இருந்தார். மருத்துவர்கள் இந்த நோய் குணமாக மருந்துகளை அளிப்பதுடன் பெல்ப்ஸ்-யை நீச்சலில் ஈடுபடுத்த அறிவுரை கூறினர். இதற்கிடையில் பெலிப்ஸ்சின் குடும்பம் இரண்டாக பிரிந்தது. பெல்ப்ஸ் தாயிடம் சென்றார். இவர் தாயார் நீச்சல் பயிற்சியில் இவரை ஈடுபடுத்த முயன்றார்.



சிறுவனாகிய பெல்ப்ஸ், தண்ணீருக்குள் முகம் புதைக்க பயந்ததால் முதலில் மல்லாந்து படுத்த நிலையில் நீச்சல் அடிக்க ஆரம்பித்தார். தன்னுடைய கவனத்தை முழுவதும் நீச்சல் பயிற்சியில் செலுத்தினார். இதுவே இவருடைய வாழ்க்கையாக மாறியது. தினமும் 6 மணி



நேரம், ஏழு நாட்களும் தொடர்ச்சியாக பயிற்சியில் ஈடுபட்டு வந்தார். இவருடைய விடாப்பிடியான பயிற்சி இவரை ஒலிம்பிக் போட்டிக்கு நேராக வழிநடத்திச் சென்றது. பிறகு பல நீச்சல் வகைகளில் உலக சாதனைகளைப் படைத்தார். கிட்டத்தட்ட இவர் வென்ற பதக்கங்களின் எண்ணிக்கை 28. இதில் தங்கப் பதக்கங்கள் மட்டும் 23. இன்று உலகமே அதிசயப்படும் வகையில் சாதித்து உள்ளார்.

**இதை வாசிக்கும் அன்பு நண்பர்களே, உங்களுக்குள் இருக்கும் குறைகளைப் பற்றியே பேசி பேசி தோற்று போய் விடாதீர்கள். தன்னிடம் இருக்கும் குறைகளை நிறைவாக மாற்றுபவனே சாதனையாளன். உங்களால் ஏன் சாதிக்க முடியாது? உங்களால் முடியும். உங்கள் குறைகளை நம்பாதேயுங்கள். முடியும் என்று உங்களை நம்புங்கள், குறைகள் நிறைவாக மாறும். உங்கள் வாழ்க்கையும் அநேகருக்கு ஆசீர்வாதமாக மாறும்.**



## சுதந்திர தினம்

**1947ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15ஆம் தேதி, பிரித்தானியப் பேரரசின் 200 ஆண்டுகால அடக்குமுறையிலிருந்து இந்தியா அதிகாரப்பூர்வமாக சுதந்திரம் பெற்றது. அன்றிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 15 ஆம் தேதி சுதந்திர தினமாக கொண்டாடப்படுகிறது. இந்தியர்கள் சுதந்திரம் பெறும் வரை சுதந்திரப் போராட்டத்தை உயிர்ப்புடன் வைத்திருந்த ஆயிரக்கணக்கான வீரமிக்க தேசபக்தர்களின் தன்னலமற்ற தியாகங்களை போற்றும் வகையில் இது கொண்டாடப்படுகிறது. இந்தியாவின் முதல் சுதந்திர தினம் ஆகஸ்ட் 15, 1947 அன்று கொண்டாடப்பட்டது. சுதந்திர இந்தியாவில் முதன்முறையாக இந்திய தேசியக் கொடி ஏற்றப்பட்டது இந்த நாளில்தான். இந்த ஆண்டு இந்தியா தனது 76வது சுதந்திர தினத்தை கொண்டாடுகிறது.**





# மனந்திரும்பினால் வாழ்க்கை கட்டப்படும்!



செய்தி: மோகன் சி. லாசரஸ்

**"நீர் சர்வவல்லவரிடத்தில் மனந்திரும்பினால், திரும்பக் கட்டப்படுவீர்; அக்கிரமத்தை உமது கூடாரத்துக்குத் தூரமாக்குவீர்." (யோபு 22:23).**

உங்கள் வாழ்க்கையில், உங்கள் குடும்பத்தில், உங்கள் வேலையில், உங்கள் தொழிலில் ஒரு பாதிப்பு வந்திருப்பதால், ''மறுபடியும் நான் எழும்ப முடியுமா? மறுபடியும் ஆசீர்வாதமாக இருக்க முடியுமா? இப்படி என் வாழ்க்கை உடைந்துப் போனதே' என்று நீங்கள் கலங்கி நிற்கலாம். நீங்கள் மனந்திரும்பினால் திரும்பவும் கட்டப்படுவீர்கள் என்று கர்த்தர் சொல்கிறார்.

எதை இழந்துப் போய் அமர்ந்திருக்கிறீர்கள்? சரீர சுகத்தை இழந்து, ஆசீர்வாதத்தை இழந்து, குடும்ப சமாதானத்தை இழந்து, குடும்ப உறவுகளை இழந்து, நிம்மதியை இழந்து, பல பிரச்சனைகள் போராட்டங்களுக்கு நடுவில், இழப்புக்கு நடுவில் நீங்கள் இருக்கலாம். நீ மனந்திரும்பினால் மறுபடியும் உன்னை கட்டி எழுப்புவேன், நீ மனந்திரும்பினால் உன் குடும்ப வாழ்க்கை திரும்ப கட்டப்படும், நீ மனந்திரும்பினால் உன் வியாபாரம் திரும்பவும் கட்டப்படும், நீ மனந்திரும்பினால் உன் வாழ்க்கை கட்டப்படும் என்று ஆண்டவர் இயேசு உங்களுக்கு சொல்கிறார்.



நீங்கள் மனந்திரும்ப வேண்டிய ஏதோ ஒரு காரியம் உங்கள் வாழ்க்கையில் இருக்கிறது. இயேசுவின் பக்கமாக மனந்திரும்புங்கள். தவறான நம்பிக்கைகளை விட்டு ஜீவனுள்ள தேவனுக்கு நேராக திரும்புங்கள். பாவ வழிகளை விட்டு பரிசுத்தமுள்ள கர்த்தருக்கு நேராக திரும்புங்கள். உங்களுடைய குறுக்கு வழிகளை விட்டு தேவனை முழு இருதயத்தோடு தேடும்படி கர்த்தருக்கு நேராக திரும்புங்கள், உங்கள் வாழ்க்கை திரும்ப கட்டப்படும். உங்களுக்காக அவர் பரிதபிக்கிறார். உங்கள் மீது அன்பு வைத்து தான் இந்த வார்த்தையைக் கொண்டு உங்களோடு பேசிக் கொண்டிருக்கிறார். மனந்திரும்பும் போது திரும்பவும் நீங்கள் கட்டப்படுவீர்கள். வாலிபனே! உன் வாழ்க்கையை யோசித்துப் பார். உன்னுடைய வழிகளை சிந்தித்துப் பார். தவறான ஒரு பாதையில், தவறான ஒரு இடத்தை நோக்கி நீ ஓடிக்கொண்டிருக்கிறாய். நீ மனந்திரும்ப வேண்டுமென்று கர்த்தர் உன்னோடு பேசுகிறார்.

சென்னையில் ECI சபையைச் சார்ந்த ஒரு வாலிபனின் பெற்றோர்கள்

இரட்சிக்கப்பட்டிருந்தார்கள். தகப்பனாரின் கண்டிப்பின் நிமித்தம் ஆலயத்திற்கு வந்து பின்னால் உட்காருவான். பாட்டு, ஆராதனை, பிரசங்க வேளைகளில் இவன் 'எப்போது முடியும்' என்று காத்திருப்பான். ஆலயம் முடிந்தவுடனே ஆலயத்தை விட்டு கொஞ்ச தூரம் வெளியே வந்து ஒரு பெட்டிக்கடையில் சிகரெட் வாங்கி பற்ற வைத்துக் கொண்டு அப்படியே நடப்பான். ஆண்டவருக்கும் அவனுக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை. 12ம் வகுப்பு படித்து முடித்து, மேற்படிப்பு படிக்க வேண்டும் என்று சொன்னான். அதற்கு அவன் அப்பா, பள்ளிக்கூடம் படிக்கிற நாட்களிலேயே நீ ஆண்டவருக்கு பயப்படவில்லை; துன்மார்க்கமாக அலைகிறாய், உன்னை கல்லூரியில் படிக்க வைத்தால் அவ்வளவுதான், உன்னை படிக்க வைக்க என்னிடம் பணம் இல்லை, அதனால் ஏதாவது வேலைக்கு போ என்று சொன்னார். அவன் ஒரு ஓர்க் ஷாப்பில் வேலை செய்தான். ஆனால் தகப்பனாருடைய கட்டளைப் பிரகாரம் தவறாமல் ஆலயத்திற்கு வருவான். அவனுடைய வாழ்க்கையில் நிம்மதியில்லை, சமாதானமில்லை, அதிகமான படிப்பும் இல்லை, இனி எதிர்காலம் எப்படி இருக்கும்? என் வாழ்க்கை கட்டப்படவில்லை! வாலிப வயதில் இந்த நிலமைக்கு ஆகிவிட்டேனே என்று கலங்கி நின்றான்.

வழக்கம் போல அன்றைக்கும் ஆலயத்தில் போய் சும்மா உட்கார்ந்திருந்தான். அன்றைக்கு வந்த பிரசங்கியார், யோபு 22:22,23ம் வசனங்களை சொல்லி பிரசங்கித்தார். நீ மனந்திரும்பினால் நீ கட்டப்படுவாய். நீ மனந்திரும்பினால் உன் வாழ்க்கையை இயேசு கட்டி எழுப்புவார். அந்த வார்த்தை நேரடியாக அவனோடு பேசினதைப் போல இருந்தது. 'வாலிபனே, நீ மனந்திரும்பினால் கர்த்தர் உன் வாழ்க்கையைக் கட்டி எழுப்புவார்'. அந்த வார்த்தை அவனுடைய உள்ளத்தில் ஊடுருவி பாய்ந்தது.



கர்த்தர் அவனோடு பேசுவதை உணர்ந்தான். அதுவரைக்கும் தன் தகப்பனாருக்காக, பேருக்காக ஆலயத்திற்கு வந்து போகிறவன், அன்று அந்த வார்த்தை அவனோடு பேசினபடியினால், 'கர்த்தாவே! என்னுடைய பாவ வழிகளை விட்டு நான் மனந்திரும்புகிறேன், என் வாலிப நாட்களின் மீறுதல்களை விட்டு நான் மனந்திரும்புகிறேன்' என்று தன் வழிகளை கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்தான், மனந்திரும்பினான். ஆலயத்தை விட்டு வெளியே வந்த போது, இயேசுவுக்கு தன் வாழ்க்கையை ஒப்புக்கொடுத்தவனாய் வந்தான். ஜெபிக்க ஆரம்பித்தான். வேதத்தை தியானிக்க ஆரம்பித்தான். உண்மையாக கர்த்தரை அவன் பற்றிக் கொண்ட, போது கர்த்தர் அவனுக்கு இரக்கம் பாராட்டினார்.

தான் சம்பாதித்த பணத்தை வைத்து, மாலை நேரத்தில் கம்யூட்டர் படித்தான். அமெரிக்கா செல்வதற்கு தேவன் ஒரு வழியை திறந்தார். நல்ல மனைவி, நல்ல பிள்ளைகள், நல்ல குடும்பத்தைக் கர்த்தர் கொடுத்தார். அந்த சகோதரன் என்னோடு பேசும் பொழுது சொன்ன ஒரு காரியம், ''அன்று சபையில், கர்த்தர் இந்த வசனத்தைக் கொண்டு என்னோடு பேசிய போது, என் வாழ்க்கையை நான் ஒப்புக் கொடுத்தேன். வெறும் 12ம் வகுப்பு படித்த நான் இன்றைக்கு அமெரிக்கா தேசத்தில் இருக்கிற பிரபலமான பெரிய யூனிவர்சிட்டியில் வேலை பார்த்து வருகிறேன். வெறும் 12ம் வகுப்பு படித்த நான் கொஞ்சம் கம்யூட்டர் கோர்ஸ் படித்ததினால் பெரிய வேலை கிடைத்தது. இன்றைக்கு இலவசமாய் அதே யூனிவர்சிட்டியில் டிகிரி படித்து முடிக்க கர்த்தர் உதவி செய்தார். என்னை கட்டி எழுப்பி வைத்திருக்கிறார். என் வாழ்க்கையே அவ்வளவுதான் என்று எண்ணிக் கொண்டிருந்தேன். இன்றைக்கு இந்த தேசத்திலே கொண்டு வந்து உயர்ந்த ஸ்தானத்தில் கர்த்தர் வைத்திருக்கிறார்'' என்றார். மனந்திரும்பினால் நீங்கள் கட்டப்படுவீர்கள்.

**வாலிபனே! உன்னுடைய பாவ வழிகளை விட்டு, துன்மார்க்கமான வழிகளை விட்டு, குறுக்கு வழிகளை விட்டு, தவறான நண்பர்களோடு நடக்கிற வழிகளை விட்டு, நீ தேவன் பக்கமாய் திரும்பினால் உன் வாழ்க்கை கட்டப்படும் என்று கர்த்தர் வாக்குக் கொடுக்கிறார்.**




# நண்பர்கள் தினம்!




**இந்தியாவில் ஒவ்வொரு வருடமும் ஆகஸ்ட் மாதம் முதல் ஞாயிற்றுக்கிழமை நண்பர்கள் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது. நம்முடன் நன்றாக பேசுபவர்கள் சிறந்த நண்பர்கள் அல்ல. நம்மை வாழ்க்கையின் அடுத்த நிலைக்கு கொண்டு செல்பவர்களே நல்ல நண்பர்கள். நம்மைச் சுற்றி பலர் இருந்தாலும், உங்களுடைய நண்பர்களிடம் / தோழிகளிடம் இருக்க வேண்டிய முக்கியமான குணங்களை நாம் பார்க்கலாம்.**

## ஆதரவு

உண்மையான நண்பர்கள் உங்களுடைய இன்ப, துன்பங்களில் இருப்பார்கள். உங்களைத் தனியாக கஷ்டப்பட விடமாட்டார்கள்.

## மதிப்பிடமாட்டார்கள்

நல்ல நண்பர்கள் நீங்கள் எடுக்கும் முடிவுகளைப் பற்றி கேள்வி கேட்கலாம் அல்லது உங்கள் முடிவுகளை ஏற்காமலும் போகலாம். ஆனால் இவற்றை வைத்து நீங்கள் இப்படிதான் என்று ஒருபோதும் மதிப்பிடமாட்டார்கள்.

## நம்பிக்கை

நண்பர்கள் மத்தியில் நம்பிக்கை மிகவும் முக்கியமானது. நம்பிக்கையான நண்பர்கள் பாரபட்சமற்றவர்கள். அவர்கள் உங்கள் நட்பில் நிபந்தனைகளை வைப்பதில்லை.

## உங்கள் கருத்துக்களை கேட்பவர்

உங்கள் உணர்வுகள், உங்கள் மனதில் தோன்றும் கேள்விகளை காது கொடுத்து கேட்பவராக இருப்பார்கள். நீங்கள் பேசும் போது உங்கள் வார்த்தைகளை கூர்ந்து கவனிப்பவர்கள் சிறந்த நண்பர்கள் ஆவர்.

## சிறந்த விமர்சகர்

நீங்கள் செய்யும் செயல்களை எப்போதும் ஆதரிப்பவர் நல்ல நண்பனாக இருக்க முடியாது. நீங்கள் செய்யும் தவறினைச் சுட்டிக்காட்டுபவரே உண்மையான நண்பராக இருக்க முடியும்.

வேதத்தில் ஆபிரகாம் தேவனுக்கு கீழ்படிந்ததினால் இயேசுவின் நண்பராக இருந்தார் (ஆதி. 22:1-14).

லாசருவை தன் நண்பன் என்று இயேசு குறிப்பிட்டார் (யோவான் 11:1, 5, 11).

**"மோசம்போகாதிருங்கள்; ஆகாத சம்பாஷனைகள் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும்" (1 கொரி. 15:33).** அதாவது கெட்ட நண்பர்கள் கெட்டப் பழக்கங்களை சொல்லிக் கொடுப்பார்கள். கெட்டவர்களோடு நேரம் செலவிட்டால் நீங்களும் கெட்டவர்களாக மாறுவீர்கள் என்பதே இதன் அர்த்தம்.

**"ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை"**
**(யோவான் 15:13).**



வேதாகம கதாபாத்திரம்: ஜாய்லின்

# தெபொராள்

**வாசிக்க: நியாயாதிபதிகள் 4 & 5 அதிகாரங்கள்**

யோசுவாவிற்கு பிறகு ஒத்னியேல், ஏகூத், சம்கார், தெபொராள் என பல நியாயாதிபதிகளை தேவன் எழுப்பினார். கடந்த 3 மாதங்களாக 3 நியாயாதிபதிகளைக் குறித்துப் பார்த்தோம். இந்த மாதம் முதல் பெண் நியாயாதிபதியும், தீர்க்கதரிசியுமான தெபொராள் பற்றி பார்க்கப் போகிறோம். தெபொராள் என்பதற்கு "தேனீ" என்று பொருள். வேதத்தில் கூறப்பட்டுள்ள ஒரே பெண் நியாயாதிபதி இவரே.



## நற்பண்புகள்

- ✔ தேவனுடைய வழி நடத்துதலை பெற்றவர்.
- ✔ தேவ வழிநடத்துதலுக்கு உடனடியாக கீழ்ப்படிந்தவர்.
- ✔ தீர்க்கதரிசனம் உரைத்தது மட்டுமின்றி, போருக்கு செல்லும்படி பாராக்கை உற்சாகப்படுத்தினார்.
- ✔ பெண்கள் செல்லாத இடமான போர்களத்திற்கு விசுவாசத்தோடும் தைரியத்தோடும் சென்றார்.
- ✔ வெற்றி அடைந்ததால் கர்வம் அடையாமல் கர்த்தருக்கு மகிமை செலுத்தினார்.
- ✔ இஸ்ரவேலின் தாய் என்ற பேர் பெற்றார்.

## பலம் மற்றும் சாதனைகள்

- ✔ மத்தியஸ்தர், ஆலோசகர், வழக்கறிஞர் போன்ற பல விசேஷ குணநலன்கள் இவருக்குள் இருந்தன.
- ✔ வழிநடத்தி செல்வதற்கென அழைப்பு வந்தபோது, திட்டமிடுவதற்கும், ஆலோசனை வழங்குவதற்கும், பொறுப்புகளைப் பகிர்ந்து அளிப்பதற்கும் தயாராக இருந்தாள்.
- ✔ இஸ்ரவேலின் நான்காவது நியாயாதிபதி. முதல் பெண் நியாயாதிபதி.
- ✔ தீர்க்கதரிசன வரம் வல்லமையாய் செயல்பட்டது.
- ✔ அநேக பாடல்களையும் எழுதினார்.





பழைய ஏற்பாட்டு காலத்தில் ஒரு பெண் நியாயாதிபதியாக எழும்புவது என்பது சாதாரணமான காரியமல்ல. அக்காலத்திலேயே ஒரு பெண் கர்த்தருக்காக தீர்க்கதரிசியாக இருந்திருக்கிறார்கள் என்றால் இக்காலத்திலும் அநேகப் பெண்கள் கர்த்தருக்காக எழும்பலாமே! கிறிஸ்தவர்கள் என்பதில் பிரயோஜனமில்லை, கிறிஸ்துவை உடையவர்களாக இருக்கிறோமா என்பது தான் மிகவும் முக்கியம். நாமும் கிறிஸ்துவின் சாயலைத் தரித்துக் கொண்டால் நிச்சயம் தெபொராளாக எழும்ப முடியும்.

# விழித்திருந்தவர்கள்...

சிந்தனை சிதறல்:
பெனிட்டா

## ஐந்து கன்னிகைகள்!




பத்து கன்னிகைகள் கைகளிலும் விளக்குகள் இருந்தன. ஆனால் புத்தியுள்ளவர்கள் கைகளில் விளக்கோடு தங்கள் வழிப்பயணத்திற்கு எவ்வளவு எண்ணெய் தேவை என்பதை அறிந்து, தேவையான எண்ணெயையும் ஆயத்தமாக எடுத்துச் சென்றார்கள். புத்தியில்லாதவர்கள் ஆயத்தமில்லாமல் இருந்தார்கள். மணவாளன் வர தாமதித்தார், பத்து பேரும் நித்திரையாயிருந்தார்கள். திடீரென்று மணவாளன் வந்த போது பத்து பேரும் விளக்கை ஆயத்தம் பண்ணினர். புத்தியுள்ளவர்களின் விளக்கு எரிந்து பிரகாசித்தது. புத்தியில்லாதவர்களின் விளக்கு எரிந்து அணைந்தது. எனவே புத்தியுள்ளவர்களிடம் இரவலாக எண்ணெய் கேட்டார்கள். உடனே புத்தியுள்ளவர்கள், **“...எங்களுக்கும் உங்களுக்கும் போதாமலிராதபடி, நீங்கள் விற்கிறவர்களிடத்திற்குப் போய், உங்களுக்காக வாங்கிக்கொள்ளுங்கள் என்றார்கள்” (மத். 25:9).** மணவாளன் வந்தார், புத்தியுள்ள ஐந்து கன்னிகைகள் மணவாளனோடு கலியாண வீட்டிற்குள் பிரவேசித்தார்கள். உடனே கதவு அடைக்கப்பட்டது. புத்தியில்லாதவர்கள் வந்து கதவை தட்டினார்கள். மணவாளன் கதவைத் திறந்து நான் உங்களை அறியேன் என்று சொன்னார். மற்ற 5 கன்னிகைகளைப் போல ஆயத்தமாக வந்திருந்தால் மணவாளனோடு பிரவேசிக்கும் வாய்ப்புக் கிடைத்திருக்கும். (வாசிக்க: மத்தேயு 25:1-13)

**அன்பான வாலிபர்களே! மனுஷகுமாரன் வருகிற நாள் நமக்கு தெரியாததினால் புத்தியுள்ள கன்னிகைகளைப் போல எப்பொழுதும் விழிப்போடு இருக்க வேண்டும். இந்த கடைசி நாட்களில் எல்லா ஆயத்தத்தோடும், உங்கள் தேவனை சந்திக்க விழித்திருக்கிறீர்களா?**

கெத்செமனே தோட்டத்தில் ஆண்டவர் துக்கமும், வியாகுலமும் நிறைந்தவராய் காணப்பட்டார். பேதுரு, யாக்கோபு, யோவானைப் பார்த்து நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள் (மத். 26:41) என்று இயேசு கிறிஸ்து கூறினார். சீஷர்களுக்கு சோதனை வருவதை அறிந்த இயேசு கிறிஸ்து, சோதனையிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு விழித்திருந்து ஜெபிப்பதே ஒரே வழி என்று ஜெபிக்க சொன்னார். ஆனால் அவர்களோ ஜெபிப்பதற்கு பதிலாக தூங்கிக் கொண்டிருந்தார்கள். சோதனை வந்தவுடன் பேதுரு ஒரு போர் சேவகனின் காதை வெட்டினான். விழித்திருந்து ஜெபம் செய்யாதபடியினால், பாவத்தில் வீழ்ந்தான். இயேசுவை மறுதலித்தான். ஆனால் விழித்திருந்து ஜெபம் செய்த இயேசு கிறிஸ்துவோ தேவ வல்லமையால் நிறைந்திருந்தார். அவரைப் பிடிக்க வந்த போர் சேவகர்கள் அவருடைய வல்லமைக்கு முன்பாக நிற்க முடியாமல் கீழே விழுந்தார்கள் (யோவான் 18:6). இயேசு கிறிஸ்து மிகவும் நேர்மையாகவும், அன்பாகவும் நடந்து கொண்டார். தேவன் நம்மையும் சோதனைக்காக ஆயத்தம் செய்ய விரும்புகிறார். சோதனையை ஜெயிக்க ஜெபம் மிகவும் அவசியம், தேவ பெலனின்றி நாம் சோதனையை மேற்கொள்ள முடியாது.

**அன்பான வாலிபர்களே! இயேசு பல விதங்களில் எச்சரித்தும், சீஷர்களைப் போல ஜெபத்தை அசட்டை செய்தும், தேவ சத்தத்தை நிராகரித்தும் சோதனையில் விழுந்து போகிறோம். எனவே இயேசுவைப் போல விழித்திருந்து ஜெபிக்கிறவர்களாக மாற ஒப்புக் கொடுப்பீர்களா?**



## இயேசு கிறிஸ்து!

# விழித்திராதவர்கள்...

## பேதுரு!



இயேசு கைது செய்யப்பட்ட போது ஒரு சம்பவம் நடந்தது. யூதாஸ் இயேசுவை காட்டிக் கொடுத்தான். போர்ச் சேவகர்கள் அவரை கை போட்டு பிடித்தார்கள். பேதுரு ஆத்திரத்தில் தன்னுடைய உறையிலிருந்து தன் பட்டயத்தை எடுத்து மல்குஸ் என்பவனின் ஒரு காதை வெட்டினான். கீழே விழுந்த காதை எடுத்து இயேசு ஒட்ட வைத்தார். பட்டயத்தை உறையில் போடும்படியும், அதை எடுப்பவர்கள் அதனாலேயே மரிப்பார்கள் என்றும் கூறினார். பேதுருவின் சிறிது நேர துணிவின் விளைவு அவனை கோழைத்தனத்திற்கு வழிகாட்டியது. பேதுரு இயேசுவை பின் தொடர்ந்து பிரதான ஆசாரியனின் அரண்மனை வரை சென்றான். யோவானைப் போல இயேசுவின் அருகில் நிற்க வேண்டியவன், வெளியே நின்ற கூட்டத்தில் ஒருவனாய் நின்று, இயேசுவை மூன்று முறை மறுதலித்து சபிக்கவும், சத்தியம் பண்ணவும் தொடங்கினான். உடனே சேவல் இரண்டாந்தரம் கூவிற்று. சேவல் இரண்டு தரங்கூவுகிறதற்கு முன்னே நீ என்னை மூன்று தரம் மறுதலிப்பாய் என்று இயேசு தனக்குச் சொன்ன வார்த்தையைப் பேதுரு நினைவு கூர்ந்து மிகவும் அழுதான். இயேசுவின் சிலுவை மரணமும், தன்னுடைய இறுதி மறுதலிப்பும் பேதுருவை மிகவும் பாதித்தது. மனங்கசந்து அழுது வேண்டிக் கொண்டமையால் பாவம் நீங்கி சுத்தமானான். (மத்தேயு 26:47-58)

**அன்பான வாலிபர்களே! சோதனை வருகிறது என்று எச்சரித்து, இயேசு விழித்திருந்து ஜெபிக்க சொன்ன போது, விழித்திராமல் தூங்கின பேதுருவை சாத்தான் வஞ்சித்து, பாவம் செய்யத் தூண்டினான். எனவே விழித்திருங்கள்!**

## சிம்சோன்!

சிம்சோன் என்னும் வாலிபன் மிகவும் பலசாலியாக இருந்தான். பாய்ந்து வந்த சிங்கத்தின் வாயைப் பிடித்து வெறுங்கையால் இரண்டாக கிழித்துப் போட்டான். தன்னை எதிர்த்து வந்த 3000 பெலிஸ்தியர்களை அழித்தான். யானைகளாலும் உடைக்க முடியாத கோட்டைக் கதவை பெயர்த்து தோள்களில் சுமந்து சென்றான். கை, கால்களைக் கட்டி சரணடைய சொன்னபோது, சிம்சோன் ஒரேயொரு முறை மட்டுமே திமிறியபோது நெருப்புப்பட்ட நூல் போல் பலமான முறுக்குக் கயிறுகள் அறுந்து கீழே விழுந்தன. இப்படிப்பட்ட பலசாலியான சிம்சோன் தெலீலாள் என்னும் பெண்ணை விரும்பினான். இதை அறிந்து பெலிஸ்தியர்கள் ''அவனுக்கு எப்படி இவ்வளவு பலமும், வீரமும் வந்தது என்று அவனிடம் விசாரித்து எங்களிடம் சொல்'' என்று கூறியிருந்தனர். சிம்சோன் தனது பலத்துக்கான ரகசியத்தை தெலீலாள் நச்சரித்துக் கேட்டும் முதலில் சொல்லவில்லை. ஆனால் ஒரு தருணத்தில் நான் ஒரு நசரேயன், அதனால் என்னுடைய தலைமுடியை இதுவரை வெட்டியதே இல்லை, முடியை வெட்டினால் என்னுடைய பலமெல்லாம் போய்விடும் என்று தன் ரகசியத்தை சொல்லி விட்டான். உடனே தெலீலாள் அவனை தன்னுடைய மடியில் தூங்க வைத்து அவனுடைய தலைமுடியை வெட்டினாள். அவன் தூக்கத்திலிருந்து எழும்புவதற்காக, பெலிஸ்தியர்கள் வந்து விட்டார்கள் என்று சத்தமிட்டு கூப்பிட்டாள். சத்தம் கேட்டு எழுந்து பார்த்த சிம்சோன் தனது பலமெல்லாம் போயிருந்ததை கண்டான். தெலீலாள் தனக்கு துரோகம் செய்து விட்டதை உணர்ந்து வருந்தினான். (நியாதி. 14-16 அதிகாரங்கள்)

**அன்பான வாலிபர்களே! தூக்கத்தை விரும்பி பெண்ணின் மடியில் படுத்து உறங்கியதால் தேவன் கொடுத்த பலத்தையே இழந்தான். அவன் விழிப்போடு இருந்திருந்தால் இந்த நிலை வந்திருக்காது. எனவே எப்பொழுதும் விழிப்பாக இருங்கள்!**





நிகழ்வு: காலேப்

# ஓடுகளம்!

## எழுப்புதல் ஓட்டம்

**'ஓடுகளம்' என்கிற தொடர் மூலம் ஒவ்வொரு மாதமும் தேவனுக்காக ஓடியவர்களைக் குறித்தும், மாரத்தான் ஓட்டப்பந்தய வீரர்களைக் குறித்தும் பார்த்து வருகிறோம். தேவ மனிதர்களின் தீவிரமான ஓட்டம் தேவ ஜனங்களுக்கு விடுதலையையும், ஆசீர்வாதத்தையும் கொடுத்தது. இந்த கடைசிகால எழுப்புதலுக்காக தெரிந்து கொள்ளப்பட்ட நம் மூலம் அநேகர் விடுவிக்கப்படவும், ஆசீர்வதிக்கப்படவும் வேண்டுமென்றால் நாம் தீவிரமாக ஓடவும், செயல்படவும் வேண்டும். ஆனால் சில வேளைகளில் பிரச்சனைகள், போராட்டங்கள் மற்றும் பின்மாற்றங்கள் நம் ஓட்டத்தை தடைசெய்கின்றன. அதுமட்டுமல்லாமல் தவறான திசையில் ஓடவும் வைக்கின்றன. இந்த தடைகளை மேற்கொண்டு, எழுப்புதலில் தேவனுக்காக எப்படி ஓடுவது என்பதைப் பார்க்கலாம்.**

கென்யா நாட்டை சேர்ந்த மாரத்தான் ஓட்டப்பந்தய வீரர் எலியுட் சிப்சோகே, 2004ம் ஆண்டு முதல் மாரத்தான் போட்டிகளில் பங்குபெற்று வந்தார். ஆனால் 2016ம் ஆண்டு வரை பெரிதாக எந்த சாதனையையும் செய்யவில்லை. 2016ம் ஆண்டு மற்றும் 2021ம் ஆண்டுகளில்




நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் தொடர்ச்சியாக தங்கம் வென்று உலக சாதனைப் படைத்தார். இதை 24, 25 வயது ஓட்டபந்தய வீரர் செய்திருந்தால் யாரும் ஆச்சரியப்பட்டிருக்கமாட்டார்கள். ஆனால் சிப்சோகே தனது 36ம் வயதில் இந்த சாதனையை செய்தது, அநேகரை வியக்க வைத்தது. பெரும்பாலும் மாரத்தான் வீரர்கள் 34-36 வயதிற்குள் ஓய்வு பெற்று விடுவார்கள். ஆனால் சிப்சோகே 2019ம் ஆண்டில், தனது 34ம் வயதில் 42.5 கி.மீட்டர் தூர மாரத்தானை 2 மணி நேரத்திற்குள் ஓடி முடித்தார். மாரத்தான் வரலாற்றிலேயே இதுவரை யாரும் இத்தகைய சாதனையை செய்ததே இல்லை. சிப்சோகே தனது வயதையும், முந்தைய தோல்விகளையும் பார்த்து, இதற்கு மேல் நாம் என்ன சாதிக்க போகிறோம் என்று நினைத்து, கடினமாக உழைக்காமல் இருந்திருந்தால் இவ்வளவு மகத்தான சாதனையை படைத்திருக்க முடியாது.

எலியுட் சிப்சோகே குறித்து வாசிக்கும் போது வேதத்தில் தேவனுக்காக பெரிய காரியங்களை செய்த, உலகத்தின் அனைத்து கண்டங்களுக்கும் சுவிசேஷத்தின் வெளிச்சத்தைப் பிரகாசிக்க செய்த அப்போஸ்தலனாகிய பவுல் தான் நம் நினைவிற்கு வருகிறார். இயேசுவைப் பற்றி சொன்னவர்களை கடுமையாக எதிர்த்து, சிறைப்படுத்தின பவுல் இரட்சிக்கப்பட்ட பின்பு, எவ்வளவு தீவிரமாக இயேசுவை அறிவிக்க செயல்பட்டார் என்பது நமக்கு தெரியும், அதற்கு காரணம் என்ன என்று பார்க்கலாம்.

## கிறிஸ்துவின் அன்பு நெருக்கி ஏவியது

**“கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது;...” (2 கொரி. 5:14)** என்று பவுல் சொல்கிறார். பவுல் பல்வேறு பாடுகளையும், உபத்திரவங்களையும் சந்தித்தாலும், ஒருநாளும் ஊழியத்தை விட்டு பின்வாங்கவோ, சோர்ந்து போகவோ இல்லை. அதற்கு பிரதான காரணம் இயேசுவின் மீது அவர் வைத்திருந்த அன்பு. ‘‘கிறிஸ்துவின் அன்பை விட்டு என்னை எதுவும் பிரிக்க முடியாதென்று நிச்சயத்திருக்கிறேன்’’ (ரோமர் 8:37-39) என்று எழுதியிருக்கிறார். பவுல் இயேசுவுக்காக வெற்றிகரமாக ஓடி முடிப்பதற்கு முக்கிய காரணம் இயேசுவின் மேல் வைத்த அன்பு. இன்றும் நாம் இயேசுவுக்காக எழும்பி பிரகாசிக்க முடியாமல், அவருக்காக ஓட முடியாமல் முடங்கி இருப்பதற்கு இயேசுவின் மீது வைத்திருக்கும் அன்பு தணிந்து இருப்பதே காரணம். இயேசுவின் அன்பு நிரப்பாத இருதயத்தை உலக அன்பு மற்றும் சிற்றின்பங்கள் நிரப்பிவிடும். இந்த கடைசி காலத்தில் நாம் தேவனுக்காக பிரகாசிக்க வேண்டுமென்றால் இயேசுவின் அன்பினால் நிரப்பப்படுவது அவசியம்.

## சுவிசேஷத்திற்கான வைராக்கியம்

அப்போஸ்தலர் 2ம் அதிகாரத்தில் ஆரம்பித்த எழுப்புதல் தீவிரமாக பரவிக் கொண்டிருந்தது. ஆனால் புறஜாதிகளுக்கு (யூதரல்லாதவர்கள்) சுவிசேஷம் இன்னும் சென்றடையவில்லை. பவுல் புறஜாதிகளுக்கு சுவிசேஷம் அறிவிக்க தெரிந்து கொள்ளப்பட்டதினால், அவர் தீவிரமாக சுவிசேஷத்தை பிரசங்கிக்க தொடங்கினார். எத்தனையோ நெருக்கங்கள், போராட்டங்கள், மனிதரால் வரும் எதிர்ப்புகள் மத்தியிலும் பிசாசின்




பிடியில் சிக்கிக் கொண்டிருக்கும் ஆத்துமாக்களை மீட்க வேண்டும் என்கிற வாஞ்சையும், வைராக்கியமும் பவுலை அமர்ந்திருக்க விடாமல் ஓடச் செய்தது. அநேக பட்டணங்களில் எதிர்ப்புகள், ஆபத்துகள் வரும் என்று தெரிந்தும் துணிச்சலாக சுவிசேஷம் அறிவிக்க சென்றார். இன்று சின்ன பிரச்சனைகள், போராட்டங்கள், எதிர்ப்புகளை பார்த்து நாம் சோர்ந்து விடுகிறோம், முடங்கி விடுகிறோம், ஆனால் பவுல் கர்த்தருக்காக காண்பித்த வைராக்கியம், இறுதி வரை தேவனுக்காக அவரை ஓடச் செய்தது. இன்று நாமும் அப்படிப்பட்ட வைராக்கியத்தினால் நிரப்பப்படும் போது, தேவனுக்காக பெரிய காரியங்களை செய்ய முடியும்.

அன்பு வாலிபர்களே, 2000 வருடங்களுக்கு முன்பு வாழ்ந்த பவுலே சுவிசேஷத்தை அறிவிக்க இவ்வளவு தீவிரமாக செயல்பட்டார் என்றால், இந்த கடைசி காலத்தில் வாழ்கின்ற நாம் எவ்வளவு தீவிரத்தோடு செயல்பட வேண்டும் என்பதை சிந்தித்து பாருங்கள்! வசதி, வாய்ப்புகள் இல்லாத அந்த காலக்கட்டத்தில் பவுல் அவ்வளவு நற்செய்தியை அறிவித்திருக்கிறார். ஆனால் இன்று இத்தனை வசதிகள், வாய்ப்புகள் இருந்தும் நற்செய்தியை அறிவிக்காமல் இருக்கிறோம். வரப்போகின்ற கடைசிகால எழுப்புதலில் இயேசுவின் அன்பினாலும், வைராக்கியத்தினாலும் நிறைந்து செயல்படுகிற பவுல்கள் எழும்ப வேண்டும் என்று இயேசு காத்திருக்கிறார். இன்று அவர் சத்தத்தை கேட்டு, இயேசுவுக்காக செயல்படவும், அழிந்து போகின்ற ஆத்துமாக்களை மீட்கவும் உன் வாழ்வை இயேசுவுக்கு தருவாயா?

**பின்பு அவன் போஜனம்பண்ணிப் பலப்பட்டான். சவுல் தமஸ்குவிலுள்ள சீஷருடனே சிலநாள் இருந்து, தாமதமின்றி, கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று ஆலயங்களிலே பிரசங்கித்தான் (அப். 9:19,20).**

யோசனையில் பெரியவர்





நிகழ்வு: கெத்சி கிளார்வின்

# இயற்கையைக் கொண்டு எதிரிகளை வீழ்த்தினார்!

வேதாகமத்தில் இஸ்ரவேல் ஜனங்களுக்கு எதிராக யுத்தங்களும் போராட்டங்களும் வந்த போது, அவர்களுக்காக கர்த்தர் கையாண்ட யுக்திகளை பற்றி இந்த ''யோசனையில் பெரியவர்'' என்னும் தொடரில் நாம் வாசித்து வருகிறோம். அதின் வரிசையில் இம்மாதம் நாம் பார்க்கவிருப்பது, சர்வத்தையும் உண்டாக்கின கர்த்தர் தம் ஜனத்தின் சுக வாழ்விற்காக இயற்கையைக் கொண்டு எதிரிகளை வீழ்த்தி யுத்தம் செய்த சம்பவத்தை பற்றி அறிந்ததுண்டா?

ஆம்! யோசனையில் பெரியவரான நம் கர்த்தர் கல்மழையைக் கொண்டு தன் ஜனங்களுக்கு வெற்றியைத் தந்தார்.

## யோசுவாவும் கல்மழையும்!

◂◂ இஸ்ரவேலர்கள் கானானை சுதந்தரித்துக் கொண்டிருக்கும் கால சூழ்நிலையில், கானானைச் சேர்ந்த 5 இராஜாக்கள் தங்கள் பெரும் படைகளோடு கிபியோனியர்களை தாக்க வந்தார்கள்.

◂◂ அவர்களை காப்பாற்றுவதற்காக யோசுவாவும் அவருடைய படை வீரர்களும் இராத்திரி முழுவதும் நடந்து போனார்கள். காலை துவங்கியே யுத்தம் நடந்து கொண்டிருந்தது.

## என்னவாயிற்று என்று உங்களுக்குத் தெரியுமா?

யோசுவாவின் பட்சம் சர்வ வல்லவர் இருந்ததினால், 5 இராஜாக்கள் கொண்ட கானானிய திரள் படைகள், நாலாப்பக்கமும் சிதறி ஓடினார்கள்.

## ஓடியதோடு யுத்தம் முடிவடைந்ததா?

அதுதான் இல்லை! காரணம் யோசனையில் பெரியவரான நம் கர்த்தரின் யுத்தமே அப்பொழுதுதான் தொடங்கியது.

ஆம்! கர்த்தர் சிதறுண்டு ஓடின கானானியர்கள் மேல் பெரிய பெரிய (ஆலங்கட்டி) கற்களை வானத்திலிருந்து விழ வைத்தார் (யோசுவா 10:11).

இதன் விளைவோ, இஸ்ரவேல் புத்திரர் பட்டயத்தால் கொன்றவர்களைப் பார்க்கிலும், கல்மழையினால் செத்தவர்கள் அதிகமாயிருந்தனர்.

இதை வாசித்துக் கொண்டிருக்கும் அன்பு நெஞ்சங்களே! உங்கள் வாழ்வில் நீங்கள் கண்ட எதிரிகளை விட நீங்கள் காணாத எத்தனையோ எதிரிகளை கர்த்தர் உங்களுக்காக சங்கரித்துக் கொண்டிருக்கிறார் என்ற உண்மையை நீங்கள் உணர முடிகிறதா?

ஆம்! நம்மை அனுதினமும் கண்ணின் மணி போல் காக்கும் நம் கர்த்தர் நம்முடன் இருப்பதால் தைரியமாய் சொல்லுவோம், **“கர்த்தர் என் வெளிச்சமும் என் இரட்சிப்புமானவர், யாருக்குப் பயப்படுவேன்? கர்த்தர் என் ஜீவனின் பெலனானவர், யாருக்கு அஞ்சுவேன்?” (சங்கீதம் 27:1).**

சரித்திரம்: ஜெயசீலன்



# ஆரம்பமும்! முடிவும்!



## தாவீதின் ஆரம்பம்

**"...ஈசாயின் குமாரனாகிய தாவீதை என் இருதயத்துக்கு ஏற்றவனாகக் கண்டேன்;..." (அப். 13:22)** என்கிற வேத பகுதி வேதத்தில் 2 முறை குறிப்பிடப்பட்டுள்ளது. கர்த்தர் தாவீதோடு நித்திய உடன்படிக்கையை ஏற்படுத்தினார். அதுமட்டுமல்ல, தாவீதின் வம்சத்தின் வழியாகத்தான் மேசியாவாகிய இயேசு கிறிஸ்து பிறந்து உலகமனைத்திற்கும் இரட்சிப்பை அருளினார் என்று தாவீது இராஜாவைக் குறித்து வேதத்தில் வாசிக்கிறோம். கர்த்தர் தாவீதின் மீது அவ்வளவு கிருபை வைக்க காரணம் என்ன? என்பதை ஒவ்வொரு மாதமும், ஒவ்வொரு தலைப்புகளில் தியானிக்க போகிறோம். இந்த மாதம் தாவீதின் ஆரம்பகால வாழ்க்கைப் பற்றி பார்க்கலாம்.

பெத்லகேமில் வாழ்ந்த போவாஸ்-ரூத் தம்பதியினரின் கொள்ளுப்பேரன் தாவீது. தாவீதின் தகப்பனாகிய ஈசாயிக்கு பிறந்த பத்துப் பிள்ளைகளில் எட்டு மகன்கள் மற்றும் இரண்டு மகள்கள். தாவீது எல்லாருக்கும் இளையவராக இருந்தார். தாவீது என்பதற்கு அன்பானவர் என்று பொருள். பொதுவாக வீட்டில் கடைசிப் பிள்ளை என்றால், எந்த வேலையும் செய்யவிட மாட்டார்கள், என்ன கேட்டாலும் வாங்கிக் கொடுப்பார்கள். என்னதான் தவறு செய்தாலும், அடம்பிடித்து அழுதாலும் கூட கடைக்குட்டி என அடிக்க மாட்டார்கள். மிகவும் செல்லப் பிள்ளையாக வைத்திருப்பார்கள்.

ஆனால் தாவீதின் விஷயத்தில் அப்படி இருக்கவில்லை. குடும்பத்தார் யாராலும் தாவீது மதிக்கப்படவில்லை (1சாமு. 16:11). வேலைக்காரர்களால் செய்யக்கூடிய தாழ்வான வேலையைச் செய்யப் பணிக்கப்பட்டார். தாவீது தன் குடும்பத்தில் மதிப்பற்ற பிள்ளையாகவும், உடன் பிறந்தவர்களால் வெறுக்கப்பட்டவருமாயிருந்தார். தாவீதின் மூத்த மூன்று அண்ணன்மார் சவுலின் இராணுவத்தில் வேலை செய்தார்கள். இஸ்ரவேலருக்கும் பெலிஸ்தியருக்கும் யுத்தம் நடந்து கொண்டிருந்த போது, தகப்பன் ஈசாய், தாவீதை போர்முனையிலிருக்கும் சகோதரர்களின் நலம் விசாரித்து வர அனுப்புகிறார். அந்த யுத்த களத்தில் தாவீதைப் பார்த்த மூத்த சகோதரன் எலியாப் ஓடி வந்து, தன் தம்பி தாவீதைக் கட்டியணைத்து, முத்தமிட்டு, 'இங்க ஏம்ப்பா வந்த, போர் நடக்கிறது, சீக்கிரம் வீட்டுக்குப் போய்விடு' என அன்பாய்ப் பேசவில்லை. மாறாக வனாந்தரத்திலுள்ள அந்தக் கொஞ்ச ஆடுகளை நீ யார் வசத்தில் விட்டாய்? யுத்தத்தைப் பார்க்க அல்லவா வந்தாய்? உன் துணிகரத்தையும், உன் இருதயத்தின் அகங்காரத்தையும் நான் அறிவேன்; என கடிந்து கொண்டார் (1சாமு. 17:28).

ஒருமுறை சாமுவேல் என்கிற தீர்க்கதரிசியை, கர்த்தர் பெத்லகேமுக்கு அனுப்பி, ஒரு பலி விருந்தை அங்கு ஆயத்தம் செய்து, அந்த பலி விருந்துக்கு தாவீதின் தகப்பனாகிய ஈசாயின் (1சாமு. 16:3-11) குடும்பத்தாரையும் அழைக்கும்படி கட்டளையிட்டார். ஈசாயின் குடும்பமே பலிவிருந்தில் கலந்து கொண்டார்கள். ஆனால் அந்த விருந்தில் பங்கு பெற வனாந்திரத்தில் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த கடைக்குட்டி தாவீதுக்கு அறிவிக்கப்படவுமில்லை, அவன் அழைக்கப்படவுமில்லை. எவ்வளவு கஷ்டமாயிருந்திருக்கும்.

இப்படி தாவீது தன் சகோதரர்களால், குடும்பத்தாரால் வெறுக்கப்பட்டு, வனாந்தரத்தில் ஆடுகளின் பின்னால் அலைந்து, தனிமைப்படுத்தப்பட்ட ஒரு பரிதாபமான வாழ்க்கை தான் வாழ்ந்து கொண்டிருந்தார். ஆனால் இந்த சூழ்நிலையிலும், **என் தகப்பனும் என் தாயும் என்னைக் கைவிட்டாலும், கர்த்தர் என்னைச் சேர்த்துக் கொள்வார் (சங். 27:10)** என தாவீது கர்த்தருக்குள் நிலைத்து நின்று, அசைக்க முடியாத விசுவாசத்தில் வளர்ந்தார். தன் தேவாதி தேவனுடன் நெருங்கி வாழும் அனுபவமுள்ளவராயிருந்தார். புதிய புதிய பாடல்களைப் பாடி கர்த்தாதிக் கர்த்தரை மகிமைப்படுத்தி மகிழ்ந்தார்.



**என் அன்பு வாலிப உள்ளங்களே! இந்த மாதம் தாவீதின் ஆரம்ப வாழ்க்கைப் பற்றி பார்த்தோம். அடுத்த மாதம் இளம் வயதில் தேவன் தாவீதை அபிஷேகம் பண்ணின பின்பு அவருடைய வாழ்க்கையில் நடந்த சம்பவங்கள் பற்றிப் பார்க்கலாம்.**



# ALERT இது கடைசிக் காலம்..!

சிறப்பு கட்டுரை: ஜாய்லின் ஜான்

என்ன உலகம் டா இது?? மனுஷங்க தானா இவங்க எல்லாம்? மனிதாபிமானத்தை விடுங்க! மனுஷ தன்மை உயிரோட தான் இருக்கா! அப்படிங்கிற அளவுக்கு இருக்குங்க இப்ப நாம வாழுற உலகம். Recentaa நான் சில நியூஸ் வீடியோஸ் பார்த்தேன். அது எல்லாம் பாத்துட்டு எனக்கு ரெண்டு நாள் தூக்கமே இல்லை. நான் கேள்விப்பட்டதுல சிலதை மட்டும் உங்களுக்கு சொல்றேன் நீங்களும் கண்டிப்பா பார்த்து இருப்பீங்க.

பத்து வருஷமா கூட வாழ்ந்த மனைவிய வீட்டிலேயே கொன்னு பீஸ் பீஸ் ஆக்கி அதை எப்படி Dispose பண்றதுன்னு தெரியாம, மிக்ஸி கிரைண்டர்ல எல்லாம் போட்டு அரைச்சு, பல நாள் வீட்டுக்குள்ளேயே வேக வச்சு, அதை தெருவுல இருக்கிற நாய்களுக்கு பிச்சு போட்டு கொடூரமா கொலை பண்ணி இருக்கார் மும்பையில இருக்கிற ஒருத்தர். இதுல Highlight என்னன்னா அவங்கள கொல்வதற்காக ரெண்டு பெரிய பெரிய ரம்பத்தை ஆர்டர் பண்ணி வாங்கி இருக்கார்.

## அடுத்த சம்பவம் இன்னும் கொடூரங்க...

டெல்லியில 20 வயசு பையன் ஒருத்தன், 16 வயசு பொண்ணு, அவனை love பண்ணி Break up பண்ணிட்டு வேற ஒரு பையன் கூட commit ஆயிட்டான்னு சொல்லி, கோவத்துல வெறி பிடித்தவன் மாதிரி ஒரு பெரிய கத்தி வாங்கி, பப்ளிக் மார்க்கெட்ல வச்சு அந்த பொண்ண 25 தடவைக்கு மேல குத்தி குத்தியே சாகடிச்சு இருக்கான். அந்த பொண்ணு நில கொலஞ்சு மயங்கி கீழே விழுந்தப்பவும் அவனுக்கு ஆத்திரம் போகாம, பக்கத்துல கிடந்த ஒரு சிமெண்ட் slab எடுத்து அந்த பொண்ணோட தலையிலேயே போட்டு உடைச்சிருக்கான். இதுல அந்த பொண்ணோட தலை 4 பீசா உடைஞ்சுபோச்சு அப்படின்னு சொல்றாங்க. இந்த சம்பவம் கிட்டத்தட்ட 1:30 மணி நேரமாக நடந்துட்டு இருந்ததாக சிசிடிவியில் பார்த்து கண்டுபிடிச்சுருக்காங்க. ஆனால் ஒருத்தர் கூட வந்து அந்த பெண்ணை காப்பாற்றல அப்படிங்கிறது தாங்க வேதனையான விஷயம்.

இதையெல்லாம் பார்க்கும் போது நம் பரிசுத்த வேதாகமத்தில் ஆண்டவர் சொன்ன அத்தனையும் நிறைவேறுகிறதைப் பார்க்க முடியுது. **"மேலும், கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக. எப்படியெனில், மனுஷர்கள் சுபாவ அன்பில்லாதவர்களாயும், கொடுமையுள்ளவர்களாயும், துரோகிகளாயும், துணிகரமுள்ளவர்களாயும் இருப்பார்கள்" (2 தீமோ 3: 1-5)** என்று வேதம் சொல்கிறது.

பாருங்க... நம்மை சுற்றி வாழ்கிற மக்கள் உண்மையான ஆண்டவரை அறியாததினால எவ்வளவு துணிகரமானவர்களாக, அன்பில்லாதவர்களாக, கொடுமைக்காரங்களாக இருக்காங்க. லூக்கா 21ம் அதிகாரத்திலேயும் இது மாதிரி நிறைய காரியங்கள் எழுதப்பட்டிருக்கிறது. **"ஆகையால் இனிச் சம்பவிக்கப்போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள்" (லூக்கா 21:36).**

நான் மேலே சொன்ன, இது மாதிரியான கொடுமையான காரியங்கள் நம் குடும்பத்தில், வீட்டில், ஊரில், தெருவில் நடக்காமல் இருக்க, நாம் இதுக்கெல்லாம் தப்பி பிழைக்க, விழித்திருந்து ஜெபம் பண்ண வேண்டுமென்று ஆண்டவர் சொல்கிறார். இப்படிப்பட்ட கொடுமையான காரியங்கள் நம் தேசத்தில் நடக்காமல் இருக்கவும், அதை செய்கிறவர்கள் பிசாசின் பிடியிலிருந்து விடுவிக்கப்படவும், ஆண்டவரின் ரத்தத்திற்குள் நம்மை மூடி மறைத்து காக்கவும் நாம் விழித்திருந்து ஜெபிப்பது மிகவும் அவசியம். அப்படி நாம் ஜெபிக்கும் போது தேவன் நம்மையும் நம் தேசத்தின் மக்களையும் அவருடைய தெய்வீக அன்பினால் நிரப்புவார். **"அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமையில்லை; அயோக்கியமானதைச் செய்யாது, சினமடையாது, தீங்கு நினையாது, அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும். சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் சகிக்கும்." (1 கொரி. 13:4-7).**

அன்பு வாலிபர்களே, அநியாயம் பெருகி அன்பு தணிந்து போயிருக்கும். இந்த கடைசி காலத்தில் பிசாசு எப்போது யாரை பயன்படுத்தி இந்த மாதிரியான கொடுமையான காரியங்களை செய்யலாம் என்று ஆர்வமாக காத்துக் கொண்டிருக்கிறான். அவனுடைய கண்ணியில் நாம் சிக்காமல் இருக்க ஒவ்வொரு நாளும் அவர் சமூகத்தில் ஜெபித்து நம்மை காத்து கொள்ள வேண்டும்.

**"தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்." (1 பேதுரு 5:8).**

வேதாகம தேசங்கள்: கெத்சி கிளார்வின்

# அசீரியா



**அன்பு வாலிபர்களே! வேதாகம தேசங்கள் என்ற தலைப்பில் ஒவ்வொரு மாதமும் வேதாகமத்தில் குறிப்பிட்டுள்ள சில தேசங்களையும் அதின் சிறப்புமிக்க பட்டணங்களையும் குறித்து பல சுவாரஸ்யமான தகவல்களை நீங்கள் வாசித்து அறிந்து வருகிறீர்கள்! தொடர்ந்து இம்மாதம் நாம் பார்க்கவிருக்கும் தேசத்தின் பெயர் ''அசீரியா''.**




## அசீரியா – பெயர்காரணம்

வேதாகமத்தில், நோவாவின் பேரனும், சேமின் குமாரனுமான அசூர் நினிவேயை கட்டினான். எனவே, அசூரிலிருந்து அசீரியா என்ற பெயர் வந்தது (ஆதி. 10:11, 22).

## அறிமுகம்

- இதெக்கேல் அல்லது திகிரிஸ் என்ற ஆற்றுக்கருகேயிருந்த ஒரு பலமுள்ள ராஜ்யம் அசீரியா ஆகும்.
- இதன் தலைநகர் ''நினிவே''. (இந்த பட்டணத்தை எச்சரிக்கவே யோனா அனுப்பப்பட்டார்)
- இஸ்மவேலின் சந்ததியார் இத்தேசத்தில் குடியேறினார்கள் (ஆதி. 25:18).
- அசீரியப் பேரரசின் நகரங்கள் – அசூர், நிம்ரோத், நினிவே.

## அசீரியா – சிறப்பம்சங்கள்

- அசீரியா பண்டைய மெசொப்பொத்தாமியாவின் வடக்கு பகுதியில் அமைந்திருந்தது.
- அதாவது, தற்கால ஈராக், ஈரான், குவைத் மற்றும் சிரியா பகுதிகளில் அமைந்திருந்தது.
- உலகின் 1-4 மில்லியன் அசீரியர்களில் பெரும்பாலானோர் தங்களின் பாரம்பரிய நகரத்தை சுற்றிலும் இன்றளவும் வசித்து வருகின்றனர்.
- அசீரியாவின் பிரபலமான அரசர்கள் – சனகெரிப், எசாரதன், அசூர்பனிப்பல் ஆவார்.

## அசீரியாவின் வீழ்ச்சி

- கி.மு 627-ல் அசூர்பனிப்பல் என்னும் அசீரியா அரசன் பல சீர்த்திருத்தங்களை செய்தான். அந்நாட்களில், மேதியர் பலப்பட்டு நினிவேயை முற்றுகைப் போட்டார்கள்.
- பின்னர், மேதியரும் பாபிலோனியரும் சேர்ந்து நினிவேயைக் கைப்பற்றினார்கள்.
- மேலும், அசீரியாவின் வீழ்ச்சியைப் பற்றி தீர்க்கதரிசனங்களில் ஏற்கெனவே சொல்லப்பட்டிருந்தது (ஏசாயா 10:5-19; நாகூம் 3:18,19; செப். 2:13-15), போல கி.மு. 606ல் அசீரியா முடிவுக்கு வந்தது.






வாலிபர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில் அனல் கொண்டு எழும்பவும், வேதத்தின் ஆழமான இரகசியங்களை அறியவும், தங்கள் தேசத்திற்காய் கூடி ஜெபித்து பெலப்படும் ஓர் இடமாகவும் IGNITERS கூடுகை அமைகிறது. நீங்களும் இக்கூடுகையில் பங்குபெற்று பெலன் அடையலாமே! உன்னை பெலப்படுத்திக் கொண்டு, பிறரையும் பெலப்படுத்த
ஆயத்தப்படு! ஆயத்தப்படுத்து!

Igniters Monthly Fellowship

## EVERY 1st SUNDAY (6th August)

**MUMBAI – DHARAVI (5PM – 8PM)**
World Revival Prayer Centre
2nd Floor, Above Balakrishna Farsan Mart,
Opp. Apna Restaurant,
Near Kamarajar School,
90 Feet Road,
9004882470

**VELLORE (3PM)**
World Revival Prayer Centre,
Ajantha Mahal,
# 3, 6th West Cross Road,
Gandhi Nagar
9442885315 | 9786379556

**TIRUPUR (4PM – 6:30PM)**
World Revival Prayer Centre,
#62, 2nd Floor,
Benny Kumaran Main Road.
9442082200

**TUTICORIN (3PM – 5:30PM)**
World Revival Prayer Centre,
Jehovah Jireh
Towers, 51/8D/3, 1st Floor
Tiruchendur Road,
Muniasamypuram Land mark :
South Police Station to Kamaraj College Rd. 9442885315

**TIRUPATI (3PM)**
Old Community Hall,
West Church
9985033401 | 9442885315

## EVERY 2nd SATURDAY (12th August)

**BANGALORE (3PM-5PM)**
Telugu Church, #21,
Nethaji Road, Railway Line
Pulikeshi Nagar, Frazer Town.
Opp: BWSSB Office.
9962085523 | 9591077110

**MADURAI (3PM -5:30PM)**
American College Higher Secondary School,
AC School
Backside to Arumugam Hotel,
Tallakulam Bus Stop.
9750955548 | 9344759316

## EVERY 2nd SUNDAY (13th August)

**SANKARANKOIL (2:30PM – 5PM)**
World Revival Prayer Centre,
Sekihnah Mahal,
Mullai Nagar.
9750955548 | 8344949555

**AMBUR (3PM-6PM)**
Concordia Hr.Sec. School,
Opp Rly.Station
9597927799 | 9442885315

**MUMBAI - THANE (4PM – 6:30PM)**
9004882470

**POLLACHI (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
Grace Auto 1st floor,
163 , raja mill road pollachi,
9486037586 | 9487856205

**THANJAVUR (3PM)**
World Revival Prayer Centre,
Near Balaji Nagar Bus Stop,
18B, TPS Nagar, MC Road
9444381971 | 9488475315

**KOVILPATTI (3PM -5:30PM)**
St. Paul's Matriculation School
9677858766 | 9787322334

**ALANGULAM (2:30PM)**
P.M.V. Packiyavathy Building,
R.A. Nursing Institute,
SCV Computers (top Floor)
Main Road,
Near Union Office Opposite
9965377427 | 9750955548

**THENI (2:30PM – 5PM)**
World Revival Prayer Centre,
#203, Madurai Road,
Opp. Anantham Silk
Dr. Kamaraj Hospital,
1st Floor
9750955548 | 9976766422

**SURANDAI (2:30PM)**
Jawarhalal Middle School
9443962141 | 9750955548

**SIVAKASI (3PM -5PM)**
World Revival Prayer Centre,
HOREB Complex, 1st Floor,
P K N Road, (Rathna vilas Stop)
9677858766 | 9442906567

**SATHANKULAM (3PM -5:30PM)**
Hendry Matric Higher Secondary
School Mela Sathankulam.
9442885315

**CHENGALPET (3PM – 5:30PM)**
Blessing School,
Tirukazhukundram Road
9488475315

**VILLUPURAM (3PM – 5:30PM)**
World Revival Prayer Centre,
HH Complex, Namnadu Textiles
Opp., Shanthi Theater Rd
8870517324 | 834411022

## EVERY 3rd SUNDAY (20th August)

**TIRUNELVELI (2:30 PM)**
World Revival Prayer Centre,
Shah Complex, #43/R4,
Rajendra Nagar, Trivandrum Road
9750955548 | 9488212915

**COIMBATORE (4 PM)**
World Revival Prayer Centre,
#90, 1st Floor, Arts College Road,
Near Charan Tower,
0422 – 2309040 | 8903405315

**TRICHY (3 PM)**
World Revival Prayer Centre,
22A, 1st Floor Thennur High
Road, Near KMC Bus Stop,
Thennur.
9488475315

**JEBAMALAI (2 PM)**
Keelamathapuram,
Kadaiyam (via)
Tenkasi Dist.
8300131000 | 9750955548

**CHENNAI (3 PM)**
VGP Victory House, Mount Road
9488475315

**NALUMAVADI (3PM -5:30PM)**
Tabernacle of God,
Nalumavadi
9442885315

**TIRUVARUR (3:30PM)**
World Revival Prayer Centre,
1A/25B, Bypass Road
(opp Arasu Autos)
9976766322 | 7373374733

**RANIPET (3PM-6PM)**
World Revival Prayer Centre,
MBT Road,
Navalpur.
9500283179 | 9442885315

**ERODE (4PM – 6:30PM)**
World Revival Prayer Centre,
#216, 1st Floor,
Near Fire Service, Gandhiji Road
9750722000

**NAGERCOIL (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
NO: 1055 K.P ROAD,
Milk Depot Junction, Nagercoil
7598155503 | 9442885315

**PONDICHERRY (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
Kottupalayam Lawspet,
opp. Latha Steel, E C R Road.
8344433800 | 9442885315

**DINDUGAL (3PM TO 6PM)**
Sophia School, Govt Hospital
Emergency Block opp
9043422612 | 9715495621

**CHITTOOR (3PM TO 6PM)**
St. Lukes Telugu Church
9487734603

## EVERY 4th SATURDAY (26th August)

**PERAMBALUR (5PM -8PM)**
World Revival Prayer Centre,
M K Complex, 71,Venkatesapuram,
Near Bank of Baroda,
Trichy Main Road.
9788788512

## EVERY 4th SUNDAY (27th August)

**THIRUVALLUR (3PM -5:30PM)**
World Revival Prayer Centre
H S R Tower, 2nd Floor,
Near CSI Gowdi Church
9488475315

**KRISHNAGIRI (3 PM – 5PM)**
World Revival Prayer Centre,
Near Arun Hospital
Royakottai Road.
9962085523 | 9524999711

**KARUR (3PM-5:30PM)**
CSI Boys High schools,
Jawahar Bazzar,
Bunglaw Street, Karur.
9489775075

இயேசு விடுவிக்கிறார்
வாலிபர் உலகம்
தொலைக்காட்சி நிகழ்ச்சி

Sathiyam
சத்தியம் TVயில்
சனிக்கிழமை தோறும்
6:30 மணி

YouTube
Comforter DIGITAL CHANNEL

காலை 7 மணிக்கு
YouTube மற்றும்
Comforter TVயிலும் பார்க்கலாம்.

வாலிபர்களே! உங்கள் நண்பர்களுக்கும் இந்த நிகழ்ச்சியை அறிமுகப்படுத்துங்கள். அதுமட்டுமல்லாமல் இந்நிகழ்ச்சி மூலம் நீங்கள் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்!!
9750955547




ON SUNDAY 27th AUGUST
TIME: 3:00 PM - 5:00 PM

IGNITERS, MONTHLY YOUTH FELLOWSHIP IS TELECASTED LIVE ONLINE IN YOUTUBE AND FACEBOOK ON LAST SUNDAY OF EVERY MONTH

ஜெபம்: பெனிட்டா

# ஜெபக்கையேடு

## ஆகஸ்ட் 2023

1. இரயில்வே துறையில் பணிபுரியும் 14 இலட்சம் ஊழியர்களின் பாதுகாப்பிற்காகவும், ஞானத்திற்காகவும் ஜெபியங்கள்.

2. இரயில்வே துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் அவர்கள் நல்ல ஞானத்தோடு இத்துறையை நடத்தி செல்ல ஜெபியுங்கள்.

3. இரயில் விபத்துக்கள் ஏற்படாமல் தடுக்கப்படவும், இரயில்வே துறை சரியான முறையில் பராமரிக்கவும் ஜெபியுங்கள்.

4. இந்தியாவில் தினமும் ஆயிரக்கணக்கான இரயில்களில் பிரயாணம் செய்யும், கோடிக்கணக்கான ஜனங்களின் பிரயாண பாதுகாப்பிற்காக ஜெபியுங்கள்.

5. இரயில்வேத் துறையில் காணப்படும் காலிப்பணியிடங்கள் நிரப்பப்படவும், தகுதியான நபர்களை வேலையில் அமர்த்தவும் அரசு ஆவன செய்யும்படி ஜெபியுங்கள்.

6. வட இந்தியாவில் கோடை வெயிலின் தாக்கத்தினால் 100க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். வெயிலின் தாக்கம் குறைக்கப்பட்டு, மரணங்கள் சம்பவிக்காதபடி ஜெபியுங்கள்.

7. காய்ச்சல் மற்றும் மூச்சு திணறலினால் பாதிக்கப்பட்டுள்ள ஜனங்கள் சீக்கிரத்தில் குணமடைய ஜெபியுங்கள்.

8. மழை இல்லாததினால் விவசாயம் பாதிக்கப்படாமல் ஏற்றநேரத்தில் மழை பெய்யவும், விவசாயம் செழிப்படையவும் ஜெபியுங்கள்.

9. விவசாயத்தை தொழிலாக கொண்டிருக்கும் ஜனங்கள் வெயிலினாலோ, மழையினாலோ பாதிக்கப்படாதபடி, நல்ல கால சூழ்நிலை உண்டாக ஜெபியுங்கள்.

10. தண்ணீர் தட்டுப்பாடின்றி கிடைக்கவும், சுகாதாரமான குடிநீர் கிடைக்கப் பெறவும் ஜெபியுங்கள்.

11. இந்தியாவில் 70% தண்ணீர் மனிதர்கள் பயன்படுத்துவதற்கு ஏற்றதாக இல்லை. எனவே சுத்தமான தண்ணீர் கிடைக்க ஜெபியுங்கள்.

12. மணிப்பூர் மாநிலத்தில் நடைபெற்ற வன்முறையினால் மரணமடைந்த குடும்பங்களின் ஆறுதலுக்காக ஜெபியுங்கள்.

13. வன்முறையை தூண்டும் பிசாசின் கிரியைகள் அழிக்கப்படவும், வன்முறைகள் தடுக்கப்படவும் ஜெபியுங்கள்.

14. இடித்து தரைமட்டமாக்கப்பட்டுள்ள சுமார் 315க்கும் மேலான திருச்சபைகள் சீக்கிரத்தில் கட்டப்பட்டு ஆராதனை நடைபெற ஜெபியுங்கள்.



**15.** ஊழியர்கள் மற்றும் விசுவாசிகள் விசுவாசத்தில் பெலப்படவும், கர்த்தரின் வல்லமை மணிப்பூர் மாநிலத்தில் வெளிப்படவும் ஜெபியுங்கள்.

**16.** மணிப்பூர் மாநிலத்தின் சமாதானத்திற்காகவும், இரட்சிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

**17.** வருமான வரித்துறை தலைவர் திரு. நிதின் குப்தா அவர்களின் பாதுகாப்பிற்காகவும், அத்துறையை அவர் நல்ல முறையில் நடத்தி செல்ல தேவ ஞானம் உண்டாகவும் ஜெபியுங்கள்.

**18.** வருமான வரித்துறையில் பணிபுரியும் 46,000 பணியாளர்கள் மேல் தேவ ஆளுகை உண்டாக ஜெபியுங்கள்.

**19.** வருமான வரித்துறை அதிகாரிகள் நேர்மையாகவும், உண்மையாகவும் செயல்பட ஜெபியுங்கள்.

**20.** வருமான வரித்துறையில் காணப்படும் ஊழல்கள் முற்றிலும் முடக்கப்பட ஜெபியுங்கள்.

**21.** இஸ்ரேல் தேசத்தின் எழுப்புதலுக்காகவும், அங்கிருக்கும் 90.62 இலட்சம் மக்கள் இரட்சிக்கப்படவும் ஜெபியுங்கள்.

**22.** இஸ்ரேல் தேசத்தின் அதிபர் திரு. ஐசக் ஹெர்சாக், பிரதமர் திரு. பெஞ்சமின் நெத்தன்யாகூ இவர்களை தேவன் பயன்படுத்தவும், பாதுகாக்கவும் ஜெபியுங்கள்.

**23.** இஸ்ரேலில் வசிக்கும் யூதர்கள், இஸ்லாமியர்கள், ட்ரூஸ், அரபியர்கள் மற்றும் அர்மேனியர்கள் இயேசுவை ஏற்றுக் கொள்ள ஜெபியுங்கள்.

**24.** இஸ்ரேல் தேசத்தின் இயற்கை வளங்கள், கனிம வளங்கள், நீர் நிலைகள் மற்றும் விவசாயம் ஆசீர்வதிக்கப்பட ஜெபியுங்கள்.

**25.** இஸ்ரேல் தேசம் அண்டை நாடுகளின் தாக்குதல்களிலிருந்து பாதுகாக்கப்பட ஜெபியுங்கள்.

**26.** குடும்பங்களில், திருச்சபைகளில் ஆவியானவர் ஊற்றப்படவும், எழுப்புதல் உண்டாகவும் ஜெபியுங்கள்.

**27.** நீதித்துறையில் எழுப்புதல் உண்டாகவும், நீதிபதிகள், வழக்கறிஞர்கள் இரட்சிக்கப்பட்டு, தேவனுக்கு சாட்சியாக வாழவும் ஜெபியுங்கள்.

**28.** பள்ளிக் கல்லூரிகளில் படிக்கும் மாணவ, மாணவியர்கள் மத்தியில் எழுப்புதல் அலை வீசவும், ஆசிரியர்கள் மீது அக்கினிப் போடப்படவும் ஜெபியுங்கள்.

**29.** பொருளாதாரத்தை சீர்குலைக்கும் ஆவிகள் கட்டப்படவும், பொருளாதாரத் துறையில் எழுப்புதல் அக்கினி போடப்படவும் ஜெபியுங்கள்.

**30.** அரசியலில் தேவ ஆளுகை உண்டாகவும், தேசத்தை ஆளுகிறவர்களை தேவன் இரட்சிக்கும்படியாகவும் ஜெபியுங்கள்.






சிறப்பு கட்டுரை:
ஜெயசீலன்

# எத்தனாய் இருந்த யாக்கோபு கீழ்ப்படிந்ததினால் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதம்!





## எத்தன்!

**நம் ஆண்டவர் இயேசுவுக்குப் பிரியமான வாலிப மலர்களே! இரட்சகர் இயேசுவின் பெயரில் உங்களுக்கு என் வாழ்த்துக்களைக் கூறுகிறேன். எல்லாரும் எப்படி இருக்கின்றீர்கள்? ஒரு புதிய கல்வி ஆண்டு, புதிய நண்பர்கள், புதிய பள்ளிகள் அல்லது புதிய வகுப்பறைகள், புதிய ஆசிரியர்கள் என எல்லாமே புதிதாகி விட்டது. இரண்டு மாதங்கள் ஓடியும் விட்டது. ரொம்ப Happy தானே? சந்தோஷமா படித்து, நறுமணம் வீசும் மலர்களாய் மாறுங்கள். உங்கள் உயர்வு உங்கள் பெற்றோருக்குப் பெருமை சேர்க்கட்டும்.**

யாக்கோபு என்பதற்கு பின்பற்றுகிறவர் என்றும், கொச்சையான மறுபொருள் 'எத்தன்' அதாவது ஏமாற்றுகிறவர் என்றும் பொருள். ஏசாவும், யாக்கோபும் இரட்டையர்கள். இதில் யாக்கோபு பெரும் ஏமாற்றுக்காரர்.

களைப்போடும், பசியோடும் வந்த தன் உடன்பிறந்த அண்ணன் ஏசாவுக்கு பசியாற, பயற்றங்கூழைக் கொடுத்து, மிகத் தந்திரமாக, முதல் மகனுக்கென்று இருந்த உரிமையைப் (சேஷ்ட புத்திர பாகத்தை) பறித்துக் கொண்டார் (ஆதி. 25:33).

தன் தாயின் தவறான வழி காட்டுதலினால், தன் தந்தையை ஏமாற்றி, தன் உடன் பிறந்த அண்ணன் ஏசாவுக்கு, தந்தை ஈசாக்கு தரவிருந்த ஆசீர்வாதங்களையெல்லாம் பெற்றுக் கொண்டார் (ஆதி. 27:35). இப்படி ஏமாற்றிப் பிழைப்பதில் மகா வல்லவரும், தந்திரசாலியுமான யாக்கோபு சொல்கிறார்...

**"...நான் கோலும் கையுமாய் இந்த யோர்தானைக் கடந்துபோனேன்; இப்பொழுது இவ்விரண்டு பரிவாரங்களையும் உடையவனானேன்" (ஆதி. 32:10)** என கர்த்தர் தனக்குத் தந்த ஆசீர்வாதங்களை நினைவு கூறுகிறார். பிறரை ஏமாற்றிப் பிழைக்கும் யாக்கோபைக் கர்த்தர் எப்படி திரளாய்ப் பெருகச் செய்தார்.



# பெற்றோருக்குக் கீழ்ப்படிந்தார்:

“யாக்கோபு தன் தகப்பனுக்கும் தன் தாய்க்கும் கீழ்ப்படிந்து....” (ஆதி. 28:7) என இந்த வேத பகுதி தொடங்குகிறது. தான் ஏமாற்றப்பட்டதை அறிந்த ஏசா, கொலைவெறியோடு இருக்கிறார். இந்த சூழ்நிலையில், தன் தாய், தகப்பனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, 40 ஆண்டுகள் தான் வளர்ந்த ஊராகிய பெயர்செபாவை விட்டு, தனது 40வது வயதில், சுமார் 150 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள பதான் அராம் என்ற, தன் தாய் மாமன் லாபான் வாழும் தேசத்தை நோக்கிச் செல்கிறார். 'நான் இங்கதான் இருப்பேன். என்ன பண்ணுவாரு ஏசா? நானும் ஒரு கை பார்த்து விடுகிறேன்;' என அம்மா, அப்பா கிட்ட வம்பு பண்ணல. மாறாக அம்மாவின் அரவணைப்பிலேயே வளர்ந்தவர், தன்னை உயிராய் நேசிக்கும் தன் அன்பு பெற்றோரைப் பிரிந்து, தான் பிறந்த வீடு, வளர்ந்த ஊர், தன் உறவுகள் என எல்லாவற்றையும் விட்டு, தன் பெற்றோரின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, கையில் ஒரு தடியுடன், வழித் துணைக்கு யாருமின்றி, தனிமையான பல இரவுகள் கடந்து, இதுவரை ஒரு முறை கூடப் பார்த்திராத தன் உறவுகளை நோக்கித் தன்னந்தனியாகத் தன் பயணத்தைத் தொடர்ந்தார். எத்தனாய் இருந்தபோதும் தன் பெற்றோரின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்து வெறும் கோலுடன் சென்ற யாக்கோபை தேவன் நினைத்துப் பார்க்க முடியாத அளவு ஆசீர்வதித்தார் என்பதை ஆதியாகமம் 32ஆம் அதிகாரத்தில் வாசிக்க முடியும்.



என் அன்பு பிள்ளைகளே! உங்க அப்பா, அம்மாவுக்குக் கீழ்ப்படிகின்றீர்களா? **“என் மகனே, உன் தகப்பன் புத்தியைக் கேள், உன் தாயின் போதகத்தைத் தள்ளாதே” (நீதி. 1:8)** என்றும், **“...உன் தகப்பன் கற்பனையைக் காத்துக்கொள்;...” (நீதி. 6:20)** என்றும் நம் கர்த்தர் சொல்கிறார். இந்த உலகத்தில் உண்மையாய் உங்களுக்காகவே வாழும் இரு ஜீவன்கள், உங்கள் அப்பாவும், அம்மாவும் தான். சில நேரம் அவர்கள் சொல்லும் ஆலோசனைகள் இந்த வாலிப வயதில் கேட்கக் கொஞ்சம் கஷ்டமாகத்தானிருக்கும். அதற்காக, என்னை ஏன் பெத்த? நீ அந்தக்காலத்து ஆளு. உனக்கு என்ன தெரியும்? நீயெல்லாம் ஒரு அம்மாவா? உன் வயித்திலயா நான் வந்து பொறக்கணும்? என கடினமான வார்த்தைகளைக் கொட்டி விடுகின்றீர்களே! சில வாலிபத் தம்பிமார், அம்மாகிட்ட வந்து சொல்வாங்க; இந்தா பாருமா உன் புருஷன் என் வழில ஓவரா Cross பண்றாரு. அவர்கிட்ட சொல்லிவை; என தகப்பனை அவமதித்து, அலட்சியப்படுத்துவதுண்டு. தம்பி, நீ எவ்வளவு படித்த மேதை என்றாலும், தகப்பனை அலட்சியம் செய்கிற உன்னை, வேதம் நீ ஒரு மூடன், முட்டாள் என்கிறது (நீதி. 15:5). **“தகப்பனை நோக்கி: ஏன் ஜநிப்பித்தாய் என்றும், தாயை நோக்கி: ஏன் பெற்றாய் என்றும் சொல்லுகிறவனுக்கு ஐயோ!” (ஏசாயா 45:10)** என்றும், **“...மதியீனனுடைய தகப்பனுக்கு மகிழ்ச்சியில்லை” (நீதி. 17:21)** என்றும் எழுதப்பட்டுள்ளது. உங்களால் உங்க அப்பா, அம்மா மகிழ்ச்சியாயிருக்கின்றார்களா?

**என் அன்பு வாலிபரே! அப்பா, அம்மாவுக்கு நீங்கள் கீழ்ப்படியவில்லை என்றால் அது சாபமாய் உங்கள் வாழ்வில் தொடரும். நீ ஆசீர்வாதமாகவே இருக்க முடியாது. யாக்கோபின் கீழ்ப்படிதல்தான், சுமார் 20 ஆண்டுகளுக்குப் பின் (ஆதி. 31:38) சொந்த ஊர் திரும்பும்போது, கையில் ஒரு கோலோடு சென்றவர், பிச்சைக்காரனாய் அல்ல, ஒரு பெரும் செல்வந்தராய்த் திரும்புகிறார். யாக்கோபைப் போல பெற்றோருக்குக் கீழ்ப்படியுங்கள். உங்கள் எதிர்காலம் ஒளிமயமாய் இருக்கும்.**

பேசலாம் வாங்க: வயலா

# Coffee with பத்திரிக்கையாளர்



பரிசுத்த வேதாகமத்தில் பெயர் குறிப்பிடப்படாமல், தான் பிறந்த தேசத்தின் பெயரால் அறியப்பட்டவர்களுள் இஸ்ரவேல் தேசத்து சிறு பெண் குறிப்பிடத்தக்கவள். சிறு பெண்ணாக வயதில் சிறியவளாக, அடிமையாக சிறை பிடிக்கப்பட்டு இருந்தாலும், சீரிய ராஜாவின் படைத்தலைவனாகிய நாகமான் என்னும் மகா பராக்கிரமசாலியின் வாழ்வில் ஒரு மாபெரும் அற்புதம் நடைபெற காரணமாயிருந்தவள் இந்த சிறுபெண்ணே! 2 இராஜாக்கள் 5ம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இந்த சிறுபெண் உடனான ஒரு உரையாடலின் கற்பனைத் தொகுப்பைக் கீழ்க் காண்போம்.

**பத்திரிக்கையாளர்:** வணக்கம் மா!

**சிறுபெண்:** வணக்கம்.

**பத்தி:** உங்களைப் பற்றி கொஞ்சம் சொல்றீங்களா?

**சி.பெ.:** நான் இஸ்ரவேல் தேசத்தில் பிறந்தவள். எங்கள் தேசம் பாலும் தேனும் ஓடுகிற செழிப்புள்ள தேசம். கர்த்தரை தெய்வமாக கொண்ட பாக்கியமுள்ள ஜனம் வாழ்கின்ற தேசம். இந்த தேசத்திலிருந்து நான் சிறையாக பிடிக்கப்பட்டு சீரியா தேசத்திற்கு கொண்டு போகப்பட்டிருந்தேன்.

**பத்தி:** உங்கள் பெற்றோர் பற்றி சொல்ல முடியுமா?

**சி.பெ:** என் பெற்றோர், தேவனாகிய கர்த்தரிடத்தில் முழு இருதயத்தோடும், முழு பலத்தோடும், முழு ஆத்துமாவோடும் அன்பு



கூறுகிறவர்கள். தேவனுடைய கட்டளைகளை இருதயத்தில் வைத்து தாங்கள் கைக்கொள்வது மட்டுமின்றி பிள்ளைகளாகிய எங்களுக்கும் கருத்தாய் போதிப்பார்கள். அதுமட்டுமல்லாமல் எங்கள் வீட்டில் நாங்கள் உட்கார்ந்திருக்கிற போதும், நடக்கிற போதும், படுத்துக் கொள்ளுகிற போதும், எழுந்திருக்கிற போதும் தேவனுடைய கட்டளைகளைக் குறித்தே பேசுவார்கள். அவைகளை எங்கள் வீட்டு நிலைகளிலும் வாசல்களிலும் எழுதி வைத்திருப்பார்கள். இந்த அளவுக்கு என் பெற்றோர் தேவ பக்தி உடையவர்கள்.

**பத்தி:** இத்தகைய தேவ பக்தியுடைய பெற்றோரின் வளர்ப்பினாலே ஒரு முழு தேசமும் கர்த்தருடைய நாமத்தை அறிவதற்கும், மகிமைப்படுத்துவதற்கும் நீங்கள் காரணமாய் இருந்துள்ளீர்கள் என்று உணருகிறேன். சரி, நீங்கள் உங்கள் எஜமானை தீர்க்கதரிசியினிடத்தில் போகச் சொன்னது ஏன்?

**சி.பெ:** முற்காலத்தில் இஸ்ரவேலில் யாதொருவர் தேவனிடத்தில் விசாரிக்க



வேண்டுமானால், தீர்க்கதரிசியினிடத்திற்கு தான் போவார்கள். சமாரியாவிலிருந்த எலிசா தீர்க்கதரிசி இரும்பை மிதக்க செய்தல், கெட்டுப் போன தண்ணீரை ஆரோக்கியமாக்குதல், சூனேமியாளின் மகனை உயிரோடெழுப்புதல் போன்ற இன்னும் பல அற்புதங்களை செய்தவர். எனவே அவரிடத்தில் சென்றால், என் எஜமானுக்கும் சுகம் கிடைக்கும் என்று எண்ணி அவரை தீர்க்கதரிசியினிடத்தில் போகச் சொன்னேன்.

**பத்தி:** உங்களை சிறை பிடித்தவர்கள் மேல் உங்களுக்கு கோபமோ, வருத்தமோ இல்லையா?

**சி.பெ:** முதலில் என்னை சிறைபிடித்தவர்கள் மேல் பயமும் வருத்தமும் இருந்தது. என்னை விட்டு விடும்படி எவ்வளவோ கெஞ்சியும் அது அவர்கள் காதில் விழவே இல்லை. போர் வீரர்களின் ஆற்றலுக்கு முன் என்னுடைய கோபமோ எவ்வித முயற்சியோ பயன் அடையாது என்பதை உணர்ந்து அமைதியாகவே இருந்தேன். ஆனால் என் எஜமானுடைய வீட்டில் அவர்கள் துன்பப்படும்போது ‘வேதனைபடட்டும்’ என்று என்னால் விட முடியவில்லை. தீமை செய்கிறவர்களுக்கும் நன்மை செய்வது தேவனுடைய பண்பு அல்லவா? என் எஜமானாகிய நாகமான், அவருடைய குஷ்டரோகத்திலிருந்து சுகம் பெறவே என் உள்ளம் விரும்பினது. எனவே எங்கள் தேசத்தில் உள்ள தீர்க்கதரிசியாகிய எலிசாவினிடத்தில் செல்லும்படி கேட்டுக் கொண்டேன். அவர்களும் சிறுபெண் தானே என்று என் சொல்லை அலட்சியம் செய்யவில்லை. உடனே இஸ்ரவேல் தேசத்துக்கு புறப்பட்டுச் சென்றார்கள்.

**பத்தி:** உங்கள் எஜமான் சுகம் பெற்று வந்ததும் எவ்வாறு உணர்ந்தீர்கள்?

**சி.பெ:** எஜமானுடைய சரீரம் புண்களினால் நாற்றமெடுத்து இருப்பதை நான் பார்த்திருக்கிறேன். அவர் இஸ்ரவேல் தேசத்திலிருந்து திரும்பி வருகையில் அவரது சரீரம் ஒரு சிறுபிள்ளையின் மாம்சம் போலிருப்பதை பார்க்கையில் மிக்க வியப்பாகவும், மகிழ்ச்சியாகவும் இருந்தது. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் எத்தனை வல்லமையுடையவர் என்று எண்ணி, எண்ணி தேவனை துதித்தேன். ‘இஸ்ரவேலில் இருக்கிற தேவனை தவிர பூமியெங்கும் வேறே தேவன் இல்லை’ என்று என் எஜமானே அறிக்கையிட்டார். மட்டுமல்ல அவர் இனிக் கர்த்தருக்கே அல்லாமல், அந்நிய தேவர்களுக்குச் சர்வாங்க தகனத்தையும் பலியையும் செலுத்துவதில்லை என்றும் கூறினார். இந்த வார்த்தைகளைக் கேட்ட பொழுது நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

**பத்தி:** இந்த சிறிய வயதிலே முழு சீரிய தேசத்திலும் கர்த்தரின் நாமம் உங்களால் அறியப்பட்டும் மகிமைப்பட்டும் இருக்கிறது என்று எண்ணி கர்த்தரை துதிக்கிறேன். நன்றி சகோதரியே!

**சி.பெ:** நன்றி விடைபெறுகிறேன்.

அன்பு வாலிப தம்பி, தங்கையே! கர்த்தரின் நாமம் சொல்லாலும், செயலாலும் அறிவிக்கப்பட வயதோ, திறமையோ தேவையில்லை என்பதை இந்த சிறுபெண் நிரூபித்துள்ளாள். நீங்களும் ‘வயதில்லை, பேச்சுத் திறமையில்லை, ஞானமில்லை, அது ஊழியம் செய்கிறவர்களின் வேலை’ என்று காரணம் கூறாமல், கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உங்கள் வார்த்தைகளாலும், செய்கையினாலும் உங்களுக்கு நன்மை செய்கிறவர்களுக்கு மட்டுமல்ல, தீமை செய்கிறவர்களுக்கும் உங்களை பகைக்கிறவர்களுக்கும் கர்த்தரின் நாமத்தையும், மகத்துவத்தையும் அறிவிப்பீர்களா?



# செய்திகள்!

## கடந்த 15 ஆண்டுகளில், வறுமையிலிருந்து 41.5 கோடி பேர் மீட்பு!

இந்தியாவில் 15 ஆண்டுகளில் 41.5 கோடி பேர் வறுமையிலிருந்து மீட்கப்பட்டுள்ளதாக ஐநா பாராட்டி உள்ளது.

உலகளாவிய பல பரிமாண வறுமைக் குறியீட்டின் சமீபத்திய புதுப்பிப்பை ஐக்கிய நாடுகள் சபை நேற்று வெளியிட்டது. இதில் இந்தியா உட்பட 25 நாடுகள் தங்களது உலகளாவிய வறுமை குறியீட்டு மதிப்புகளை 15 ஆண்டுகளில் பாதியாக குறைத்து, விரைவான முன்னேற்றத்தை நோக்கி பயணிப்பதாக ஐநா பாராட்டி உள்ளது.

ஐநாவின் புதிய புள்ளி விவரங்களின்படி, கடந்த 2005-06ம் ஆண்டிலிருந்து 2020-21ம் ஆண்டு வரை 41.5 கோடி மக்கள் வறுமையிலிருந்து வெளியேறி உள்ளனர்.

2005-06ம் ஆண்டில் இந்தியாவில் 64.5 கோடி பல்வேறு பிரிவின் கீழ் வறுமையில் இருந்த நிலையில், 2015-16 இந்த எண்ணிக்கை 37 கோடியாக குறைக்கப்பட்டது. 2019-21ல் இது 23 கோடியாக சரிந்துள்ளது. 2005-06ம் ஆண்டில் நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 55.1 சதவீதம் பேர் வறுமையில் இருந்த நிலையில் 2020-21ல் 16.4 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது.

மேலும், ஊட்டச்சத்து கிடைக்காத ஏழைகள் எண்ணிக்கை 2005-06ல் 44.3 சதவீதத்தில் இருந்து தற்போது 11.8 சதவீதமாக குறைந்துள்ளது. குழந்தை இறப்பு 4.5 சதவீதத்தில் இருந்து 1.5 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. சமையல் எரிபொருள் கிடைக்கப்பெறாதோர் எண்ணிக்கை 52.9 சதவீதத்தில் இருந்து 13.9 சதவீதமாகவும், சுகாதார வசதிகள் கிடைக்கப் பெறாதோர் எண்ணிக்கை 5.4 சதவீதத்தில் இருந்து 11.3 சதவீதமாகவும் குறைக்கப்பட்டுள்ளது. சுத்தமான குடிநீர் கிடைக்கப் பெறாதவர்கள் எண்ணிக்கை 16.4 சதவீதத்தில் இருந்து 2.7 சதவீதமாகவும், மின்சார வசதி கிடைக்கப் பெறாதோர் எண்ணிக்கை 29 சதவீதத்தில் இருந்து 2.1 சதவீதமாகவும், வீட்டு வசதி கிடைக்கப் பெறாதோர் எண்ணிக்கை 44.9 சதவீதத்திலிருந்து 13.6 சதவீதமாகவும் குறைந்துள்ளது. **- தினகரன், 12 ஜூலை 2023.**



### இந்தியாவுக்கு ஐநா பாராட்டு! 2030ல் வறுமையில் 57.5 கோடி பேர்!

வரும் 2030ம் ஆண்டுக்குள் வறுமை ஒழிப்பு, சராசரி வருமான, குழந்தைகளுக்கு அடிப்படை கல்வி, பாலின சமத்துவம் போன்றவற்றில் நிர்ணயிக்கப்பட்டுள்ள வளர்ச்சி இலக்குகளை எட்டுவதில் சிக்கல் இருப்பதாக ஐநா தெரிவித்துள்ளது. காரணம், 2030ம் ஆண்டில் உலகளவில் 57.5 கோடி கடுமையான வறுமையில் தொடர்ந்து இருப்பார்கள் என்றும், 8.4 கோடி குழந்தைகள் பள்ளி செல்லா நிலையில் நீடிப்பார்கள் என்றும் ஐநா மதிப்பிட்டுள்ளது. பாலின சமத்துவம் அடைய இன்னும் 268 ஆண்டுகள் ஆகும் என்றும் கூறி உள்ளது.

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakhsmipuram, Nalumavadi - 628 211

# அன்னாளின் மேன்மையான ஜெபம்!

**மலடியாயிருந்த அன்னாளின் மேன்மையான ஜெபத்தைக் கேட்டு தேவன் அவளது குறையை நிறைவாக்கினார். சில ஜெபத்திற்கு பதில் உடனே கிடைக்கும். சில ஜெபத்திற்கு தாமதமாக பதில் கிடைக்கும். எனவே பதில் கிடைக்கும் வரை சோர்ந்து போகாமல் (லூக்கா 18:1) ஜெபிக்க வேண்டும். சோர்ந்து போகாமல் ஜெபித்ததினால் தான் அன்னாள் தீர்க்கதரிசியாகிய சாமுவேலை பெற்றெடுக்க முடிந்தது.**

## அன்னாள்...

- தேவனுடைய ஆலயத்திற்கு சென்று ஜெபித்தாள் (1 சாமு. 1:9). அன்னாள் மனிதனை நோக்காமல் கர்த்தரை நோக்கினாள் (சங். 34:5).
- மனங்கசந்து அழுது, கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினாள் (1 சாமு. 1:10).
- சேனைகளின் கர்த்தாவே என்று சொல்லி கர்த்தரை மகிமைப்படுத்தினாள் (1 சாமு. 1:11).
- தேவரீர் உம்முடைய அடியாளின் சிறுமையைக் கண்ணோக்கிப் பாரும் என்று தாழ்மையோடு ஜெபித்தாள் (1 சாமு. 1:11).
- தன்னை மறவாமல் நினைந்தருளும் ஒன்று ஜெபித்தாள் (1 சாமு. 1:11).
- ஆண் மகனைத் தாரும் என்று குறிப்பிட்டு கருத்தாய் ஜெபித்தாள் (1 சாமு. 1:11).
- நான் அவனைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுப்பேன் என்று சுயநலமில்லாமல் ஜெபித்தாள் (1 சாமு. 1:11).
- அவன் தலையின்மேல் சவரகன் கத்தி படுவதில்லை என்று பொருத்தனைப் பண்ணி ஜெபித்தாள் (1 சாமு. 1:11).
- கர்த்தருடைய சந்நிதியில் வெகு நேரம் ஜெபம் பண்ணினாள் (1 சாமு. 1:12).
- அன்னாள் தன் இருதயத்திலே பேசி, அமைதியாக தனது வேதனையை கர்த்தருக்கு தெரியப்படுத்தி ஜெபம் பண்ணினாள் (1 சாமு. 1:13).
- தன்னை மிகவும் துக்கப்படுத்திய பெனினாளின் வாயை அடையும் என்று ஜெபிக்காமல், தனக்கு குழந்தை வேண்டும் என்பதற்காக மாத்திரம் ஜெபித்தாள் (1 சாமு. 1:6).
- நீ எதுவரைக்கும் வெறித்திருப்பாய் என்று ஏலி கேட்டதற்கு, “அப்படியல்ல ஆண்டவனே” என்று மிகத் தாழ்மையுடன் கூறி ஊழியக்காரரை கனம் பண்ணினாள் (1 சாமு. 1:15).
- இருதயத்தின் வேதனைகளை கர்த்தரிடம் ஊற்றி ஜெபித்தாள் (1 சாமு. 1:15).
- தனது ஜெபம் கேட்கப்படும் என்ற விசுவாசத்தோடு ஜெபித்தாள். ஜெபத்திற்கு பின்பு அவள் துக்கமாக இருக்கவில்லை (1 சாமு. 1:18).

**அன்பு வாலிபர்களே! அன்னாளைப் போல நிந்தையின் பாதையில் நடந்து கொண்டிருக்கிறீர்களா? நம் தேவன் நெரிந்த நாணலை முறியாதவரும், மங்கி எரிகிற திரியை அணையாதவருமாயிருக்கிறார். அன்னாளைப் போல மனங்கசந்து, உங்களைத் தாழ்த்தி, தேவ சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்து இடைவிடாமல் ஜெபியுங்கள். உங்கள் கண்ணீரை ஆனந்தகளிப்பாக மாற்றி உங்கள் நிந்தையைப் போக்க அவர் வல்லவர். ஜெபமே ஜெயம்!**



Registered with Registered News Paper of India No: TNBIL/2010/32847
Postal Registration No: TTN/26/2023-2025.
Date of Publication: 25 – 07 -2023
Date of Posting: 28th to 30th of every month.
Office of Posting: BPC, Thoothukudi HPO – 628 001.
Licensed to Post Without Prepayment No: TN/WPP-108/SR/2023-2025.

# வாலிபர் எழுப்புதல் கூடுகை

## தென்காசி மாவட்டம் திருவேங்கடத்தில்

நாள்: **ஆகஸ்ட் 5,** சனிக்கிழமை

நேரம்: காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை

இடம்: CSI கிறிஸ்து ஆலயம்,
ராஜபாளையம் ரோடு, திருவேங்கடம்

செய்தியும், ஜெபமும்: **சகோ. அவினாஷ்**

தொடர்புக்கு: 9750955548 / 9384717769

## சிதம்பரத்தில்

நாள்: **ஆகஸ்ட் 18,** வெள்ளிக்கிழமை

நேரம்: மாலை 6 மணி முதல் 8 மணி வரை

இடம்:
அன்பின் வார்த்தை இயேசு நம்மோடு சபை
அன்னை தெரசா நகர், சிதம்பரம்.

செய்தியும், ஜெபமும்: **சகோ. சதீஷ்குமார்**

தொடர்புக்கு: 94428 85315 / 94897 75075

## கோவில்பட்டியில்

நாள்: **செப்டம்பர் 10,** ஞாயிற்றுக்கிழமை

நேரம்: மாலை 5 மணி முதல் 8 மணி வரை

இடம்: யெகோவா ஷாலோம், செயின்ட் பால்ஸ்
மெட்ரிக்குலேசன் மேல்நிலைப்பள்ளி

செய்தியும், ஜெபமும்: **சகோ. அவினாஷ்**

தொடர்புக்கு:
9787322334
9677858766

## ஆந்திரா மாநிலம்... கடப்பாவில்

நாள்: **ஆகஸ்ட் 19,** சனிக்கிழமை

நேரம்: மாலை 6 மணி முதல் 9 மணி வரை

இடம்: CSI காம்பவுண்ட், கடப்பா,
ஆந்திரா.

செய்தியும், ஜெபமும்: **சகோ. சதீஷ்குமார்**

தொடர்புக்கு:
88867 39633



சகோ. அவினாஷ்



சகோ. சதீஷ் குமார்